# தமிழ்மொழியைக் குறித்த

: : : பழைய குறிப்புக்கள்

இலக்கண விளக்க ஆசிரியர் பரம்பரை

எஸ். சோமசுந்தர தேசிகர்

# தமிழ்மொழியைக் குறித்த

# பழைய குறிப்புக்கள்

இலக்கண விளக்க ஆசிரியர் பரம்பரை

எஸ். சோமசுந்தர தேசிகர்

பதிப்புரிமை]

1936

[விலை அணா [illegible]

# குறிப்பு

தமிழ் மொழியைக் குறித்த பழய குறிப்புக்கள் பலவ கும். அவைகளை எழுதியவர்கள் பெரும்பாலும் ஐரோப் யரோயாவர். அவை ஆங்கிலம் படித்தார்க்கன்றி தமிழ்மொ மாத்திரம் அறிந்தார் அறிவது இயலாததாகின்றது. அதனை வித்வான்பரீட்சைக்குச் செல்லும் தமிழ்மக்களுக்கு மிகவும் துன்பமுண்டாகிறது. அதனை ஒருவாறு ஒழிக்கக்கருதி இது பொழுது கால்டுவேல் பாதிரியார், யவனுசிரியரான தாலமி இவ்விருவரும் எழுதியன மொழிபெயர்க்கப்பட்டு பதிப் பாசிரியக் குறிப்புக்களோடு வெளியிடப்படுகிறது. பிறர் எழு தியவையும் அண்மையில் வெளிவரும்.

இக்குறிப்புக்கள் முதலில் கலாநிலையம் பத்திரிகையில் வெளியாயின. இப்பொழுது பின்னுஞ் சில திருத்தங் களோடு புத்தக உருவில் வெளிவருகிறது. கலாநிலையத்தில் முதன் முதலாக வெளியிட்டமைக்கு அப்பத்திராதிபரவர் களுக்கு எனது நன்றி உரியதாகின்றது.

# தமிழ் மொழியைக் குறித்த பழைய குறிப்புக்கள்

1. இராமாயணம், மகாபாரதம் போன்ற பழைய வடமொழிக் காவியங்களில் காணப்படும் திராவிட மொழிகளிலிருந்து தமிழ்மொழியானது 9, 10 நூற்றுண்டுகட்கு முந்தியதாகக் கூறக்கூடிய குறிப்பு ஒன்றும் காணப்படவில்லை. இந்த 9, 10 நூற்றுண்டே தமிழ் இலக்கியங்களின் பூர்வ காலம்[1] (Earliest date) என்று கூறவேண்டியிருக்கிறது.

2. உலகிலே எழுத்தில் அமைந்த பழைய நூல்களிற் காணப்படும் புராதன திராவிடமொழி மயில் என்பதற்குள்ள மொழி. கி. மு. 1000-த்தில் சாலமோனுடைய[2] மரக்கலங்

---

1. **பூர்வ காலம்.** திராவிட மொழி ஒப்பிலக்கணத்தை இரண்டாமுறை பதிப்பித்த பதிப்பாசிரியர்கள் 'இந்தக் கொள்கை திருத்தம் பெற வேண்டும்; பிற்கால ஆராய்ச்சி காவியங்கள் வெகு பழங்காலத்தன என்று காட்டியுளது' என்று குறிப்பு எழுதியிருக்கின்றனர். உண்மையில் கால்டுவெல் ஆசிரியர் புறநானூறு அகநானூறு போன்ற பழமையான நூல்களைக் கண்ணுற்றிருப்பாராயின் இவ்வாறு கூறியிருக்கவேமாட்டார் என்று நாம் உறுதியாகக் கொள்ளலாம்.

2. **சாலமோன்.** மத்திய ஆசியாவிலுள்ள எருசேலத்திலாண்ட ஓர் அரசன். இவன் இஸ்ரவேல் ஜாதியாருக்கு அரசனாக நீதியோடு அரசாண்டு கி. மு. 929-ல் இறந்தான். இவனே முதன் முதலாக எருசலேமில் கோயில் கட்டியவன்.

களில் டார்ஹிஷ் அல்லது ஓபிர்[1] நாட்டிலிருந்து கொண்டு வரப்பட்ட வாணிபப்பண்டங்களில் மயிலும் ஒன்றாக எபிரேய பாஷையிலுள்ள விவிலிய நூலில் அரசர்[2] நாளாகமங்கள்[3] என்ற பகுதிகளில் காணப்படுகிறது. இந்தச் சொல் 'அரசர்களில்' துகி என்றும் நாளாகமத்தில் தூகி என்று காணப்படும். மலையாளக் கரையிலும் தமிழகத்திலும் இந்த பறவைக்குத் தற்காலத்தில் வழங்கும் பெயர் வடமொழியான மயூரத்திலிருந்து வந்த மயில் என்ற சொல்; வடமொழியிலிருந்து வந்த சிகியையும் கூறுவர்; மயிலானது கொண்டையுடைமையினலே அது சிகி என்ற பெயர் பெற்றது. ஆனல் பழந்தமிழ் - மலையாளக்[4] காவிய நடையிலே மயிலுக்கு வழங்குவது தோகையேயாம். இந்தச் சொல் அழகிய வாலையுடைய பறவை என்று பொருள்படும். தோகையின் பகுதி 'தொக்' அல்லது 'தோக்', 'துக்' அல்லது 'தூக்' ஆகும் இவை தொங்கு என்று பொருள்படும். தூக் தூக்கு என வரும்; இதினின்றும் துணி வந்தது; புடவையின் முன்றனை தோகை என வழங்கும். துக் தோக் என்ற பகுதியிலுள்ள உயிரான உ, ஒ என்பன ஒத்து நடப்பன. இவற்றுள் சம பாதி உகரத்தையும் மற்றொரு பாதி ஒகரத்தை

1. ஓபிர் (Ophir) கீழ் நாட்டுக்கும் மேல் நாட்டுக்கும் வியாபாரம் நடக்கும் அரேபியாவிலுள்ள ஈமன் என்ற பட்டணம்.

2. அரசர். கிறிஸ்தவர் வேதமான பைபிளிலுள்ள Kings என்ற பகுதி.

3. நாளாகமம். பைபிளிலுள்ள Chronicles என்ற பகுதி.

4. தமிழ் - மலையாளம். கால்டுவெல் தமிழ் - மலையாளம் என்று கூறுவது தமிழ் நாட்டிலும் மலையாளத்திலும் மலையாளமென ஒரு மொழி ஒன்பதாவது நூற்றாண்டில் உண்டாவதற்கு முன் வழங்கிய தமிழ் மொழியைக் குறிக்கும்.

யுங்கொண்டு நடப்பன. ஆதலினாலே பினிஷியர் 'தூக்' என்பது பகுதி என்று கூறியபோது அவர்கள் பிழைபடக் கூறினவர்களல்லர். விவிலிய நூலினுள்ள 'அரசரில்' குறிலாகவும், 'நாளாகமங்'களில் நெடிலாகவும் காணப்படுதல் தமிழ்-மலையாள மொழி வழக்கேயாகும். அந்த மொழியில் நெடிலும் குறிலும்[1] [சிகி. தொகை-தோகை) வேறுபாடின்றி வழங்குகின்றன.

3. தோகை என்ற சொல் 'தோக்' அல்லது 'தூக்' என்ற பகுதியடியாகப் பிறந்த தொழிற்பெயராயினும் அவற்றின்மூலமொழி தோ அல்லது து என்பதாகத் தோற்றுகிறது. மற்றைய சொற்களையும் கூர்ந்து நோக்கும்போது க, கு என்ற எழுத்துக்கள் சேர்க்கையெழுத்துக்கள்[2] [Formatives] ஆகக் காணப்படுகின்றன. மூல எழுத்தொன்று இவ்விதமான சேர்க்கையெழுத்துக்களோடு சேர்ந்து தொழிற்பெயர்ச் சொல்லாகிப் பின்னர் இச்சொல்லே இரண்டாந்தரப் பகுதி[3] ஆகின்றது. இந்தத் தமிழ் - மலையாள எழுத்தான

---

1. **நெடில்-குறில்.** கால்டுவெல் பாதிரியார் தமிழில் நெடிலும் குறிலும் வேற்றுமையின்றி வழங்குவதாகக் கூறுவது பொருத்தமுடையதன்று. தொகை என்பது எண்ணின் தொகுதியைக் குறிக்கும். தோகை என்பது மயில், பெண், முன்றானை முதலியவற்றைக் குறிக்கும். ஓதி-ஒதி; போது, போது என்பன போன்றவற்றைக் கவனிக்க. ஆனால் செய்யுளில் நெடில் குறிலாவதும் குறில் நெடிலாவதும் செய்யுள் விகாரமேயன்றி இவர் கூறுவது போன்றல்ல.

2. **சேர்க்கை யெழுத்துக்கள்.** இதனை எழுத்துப்பேறு என்று கூறினும் கூறலாம்.

3. **இரண்டாந்தரப் பகுதி.** நட, வா, து, போன்ற மூலமாயுள்ள பகுதிகளை மூலப்பகுதி Primary Roots என்றும், தூக்கு, தோகை போன்ற தொழிற்பெயற் சொற்கள் பின்னர் விகாரப்படுதலால் அவை இரண்டாந்தர மூலம் Secondary Roots என்றும் மொழிநூல் வல்லார் (Philologist) கூறுவர்.

க, கு என்பவை மிக மிக முற்பட்டவரான பினிஷியரது [1] இந்திய வாணிப காலத்திலேயே உண்டானது என்று சொல்லுவது அதிக முக்கியமானது. இந்த எழுத்துப் புணர்ச்சியைக் குறித்து மாக்ஸ்முல்லர் பேசும்போது 'ஆரியர் வரவுக்குமுன் தமிழ்மொழி வழங்கிவந்த தென்ற பழமையை இது (எழுத்துப் பெருக்கம்) உறுதிப்படுத்துகிறது' என்று கூறுகிறார். [2] இந்தஎழுத்துப்புணர்ச்சிஒழுங்கானதென்றும், அதனின்றும் அவர் கொண்ட கூற்று (Inference) சரியாகக் கொண்டது என்றுங் கூறுவதில் நான் ஐயங்கொள்ளவில்லை. வடமொழியில்தோகை என்று உச்சரிக்கப்படுகிற தோகைஎன்னும்திராவிட மொழியினின்றும் அரபு தவஸ் (Tawas), கிரேக்கம் தவோஸ் (Taos), லத்தீன் பவோஸ் என்பவைகள் உண்டாயின. லத்தீனிலிருந்து அங்கிலம் பீபவுல் (Pea-fowl) என்ற சொல் தோன்றிற்று என்று கூறுவேன். பவேரு (Persian-babiro) என்ற பாபிலோனுக்கு இந்திய வணிகர் பலமுறை சென்றதாகப் புத்த சரிதங்களில் காணப்படுவதாக மினயேப் (Minayeff) என்பவர் கண்டு எழுதியுள்ளார். அவர்களுடைய இரண்டாவது யாத்திரையில் முதன்முதலாக மயில் வியாபாரத்திற்குக் கொண்டு செல்லப்பட்டதாகப் புத்தசரிதங்களினின்றும் அவர் எழுதுகிறார் [3].

4. அரசரிலும், நாளாகமத்திலும் காணப்படும் மற்றைய பண்டங்களுள், குரங்கு என்று பொருள்படும் கோப் (Kof) என்ற சொல்லும் ஒன்றாகும். அது வடமொழி

---

1. பினிஷியர் (Phoenicians செங்கடல், மத்திய தரைக் கடல் ஓரமாக வாணிபஞ் செய்துவந்த ஒரு மிகப் பழமையான சாதியார். இவர்கள் பாரசீகக் குடாக்கரையிலிருந்து கி. மு. ஆறு ஏழு நூற்றாண்டுகட்குமுன் குடியேறியவர்.

2. மாக்ஸ்முல்லர். இவரது பிரசங்கங்கள் பக். 209 பார்க்க.

3. See Weber's article in Indian Antiquary, 1873.

யான கபியிலிருந்து வந்ததென்பர்; கிரேக்க கேபோஸ் (Kepos) என்ற சொல்லும், ஆங்கில ஏப் (Ape) என்ற சொல்லும் அதன் திரிபே என்பர். ஆயினும் இந்தச் சொல் குரங்கு என்று பொருள்தரும் எகிப்தியச் சொல்லான காப் (Kaf) என்பதிலிருந்து வந்திருக்கவேண்டுமென்று தோற்று கிறது. லெபாழ் ரெநூப் (Lepage Renouf) என்ற ஆசிரியர் இந்தக் காப் என்னும் எகிப்தியச் சொல் எகிப்திய கல்வெட்டுக்களில் மிகுதியாகப் பயில்வதாகவும் அந்த சொல் மிகப் பழமையானது என்றுங் கூறுவர். யானை மருப்புக் குக் கூறப்படும் ஷென்ஹபிம் (Shen habbim) ஹபிமின் பல் என்ற மூலமொழியைக் குறித்து இன்று வரை நான் ஐயப்பாடுடையவனாகவே இருக்கின்றேன். எகிப்தியச் சொல் லான அப் (Ab) என்பதினின்றும் இந்தச் சொல் பிறந் திருக்கலாமோ என்று நான் நினைக்கிறேன். அல்கம் (Algum) என்பது சந்தனத்தைக் குறிக்கும் வடமொழியான வல்குக ஆகவிருத்தல் கூடும். அந்தச் சொல்லுக்கு அழகு என்ற பொரு ளும் உண்டு; ஆகையால் இது தமிழ்-மலையாளமான அழகு என்ற சொல்லிலிருந்து தோன்றியிருத்தல் கூடுமோ என ஐயுறுகிறேன்.

அஃதுண்மையாயின், அல்மக் (Almug) என்ற சொல்லி லிருந்து இது வந்தது என்று சொல்வதைக்காட்டினும் அல் கம் (Algum) என்பதினின்றும் வந்தது என்பது மிகப் பொருத்தமுடையது. பழமொழி [1] vii, 17-ல் காணப் படும் நறுமணம் வீசும் மரத்தைக் குறிக்கும் ஆலோஸ் [2]

1. **பழமொழி.** கிறிஸ்தவ வேதாகமத்திலுள்ள Proverbs என்ற பகுதி.

2. **ஆலோஸ்.** இதனைக்குறித்து **ஷாப்** என்பார் ஒரு சிறந்த கட்டுரை எழுதியுள்ளார். அதனில் இது முதலில் ஒரு பண்டத்

(Aloes) என்ற சொல் எபிரேய மொழியில் அஹலிம், அஹலோத் (Ahalim, Ahaloth) என வழங்கும். இது வடமொழி அகரு என்ற சொல்லிலிருந்து தோற்றியது என்று கூறுவதைக் காட்டினும் தமிழ்-மலையாள மொழியான அகில் என்ற சொல்லிலிருந்து வந்தது என்று கூறுவது மிகப் பொருத்தமானது. ஆயினும் இருமொழியும் ஒன்றையே குறிப்பனவாம்.

5. அரிசியைக் குறிக்கும் ஒருஸா (Oruza) என்ற கிரேக்கச் சொல் மிக்க பழமையானதாக இருக்க வேண்டும். அந்தச் சொல் இந்தியாவினின்றும் ஐரோப்பாவுக்கு அரிசி என்று கொண்டுபோகப்பட்டதோ அன்று முதல் வழங்கி வருகின்றது. இந்தச் சொல் தனித் தமிழ்ச்சொல் என்பதில் நாம் சிறிதும் ஐயங்கொள்ள வேண்டுவதில்லை. அன்று போல் இன்றும் நெல்லினின்றும் உமி நீக்கிக் குத்தி யெடுக்கப்படும் அரிசியே ஏற்றுமதிக்குச் சித்தமாயிருப்பது. மலையாள வழக்கான அரி[1] என்ற சொல் மரூஉ மொழியாகத் தோற்றுகிறது.

---

தின் பெயராயிருந்து நாளடைவில் வர்த்தகப்பெயராக மாறிவிட்டதென்பர். அகில் என்பது இந்தியாவில், முக்கியமாகத் தென் இந்திய மலைச்சரிவுகளில் ஏராளமாகப் பயிராகும் ஒரு மரமென்பது கவனித்தற் குரியது. இது கிரேக்க பாஷையில் அகல்லகோன் (Agallochon) என்றும் வழங்கும். 'கள்ளி வயிற்றினகில் பிறக்கும்' என்பது ஒரு பழைய பாட்டினடி. இவைகளாலே இது சுத்தத் தமிழ் மொழி என்றே கொள்ளவேண்டும்.

1. அரி என்ற சொல் நெல்லைக் குறிப்பதாகப் பத்துப் பாட்டில் ஒன்றான **பெரும்பாணாற்றுப்படையில்** (வரி 202) காணப்படுகிறது. கைபிடித்து அரியுந் தாளோடு கூடிய நெற்கதிருக்கு அரி என்றே இன்றும் வழங்குகிறது. ஆதலினாலே இதனை மரூஉ மொழியாகக் கொள்ள வேண்டுவது இல்லை.

6. நாம் காலம் கணிக்கக் கூடியதாகவுள்ள திராவிடச் சொல் கார்ப்பியன் (Karpion) என்று கருவாப்பட்டைக்கு வழங்கும் சொல். இந்தப் பெயர் தெஸியஸ் (Ctesias) என்ற ஆசிரியரால் இடப்பட்டது. எரதோத்தஸ் (Herodotus) கருவாப்பட்டையைக் காய்ந்த குச்சி என்பர். பினீஷியரைப் பின்பற்றி நாம் இதனைக் கின்னமோமன் (Kinnamomon) என்று சொல்லுவோம். இது ஒருமையில் கர்போஸ் (Karpos) என்றும், பன்மையில் கர்பேயா (Karphea) என்றும் வழங்குமென்றும், அரேபியச் சொற்களான கெர்பத், கிர்பஹ் (Kerfat, Kirfah) என்பவற்றை ஒத்துள்ளதென்றும் லிட்டலும் ஸ்காட்டும் (Liddel and Scot) கூறுவர். எரதோத்தஸ் கின்னமன் என்ற சொல்மட்டும் அன்னியமொழி என்றும் கார்போஸ் என்ற சொல் காய்தல் என்று பொருள்படும் கார்போ என்ற மூலமொழியிலிருந்து இயற்கையாக வந்ததென்றும் கருதுவர். தேஸியஸால் கூறப்பட்ட சொல் அரபுமொழிக்கும் திராவிடமொழிக்கும் ஒற்றுமையுடையதுபோற் றோற்றுகின்றது. இந்தியாவைக் குறித்துக் கிரேக்க பாஷையில் முதன்முதலில் எழுதியவரான தேஸியஸ், லாரலைப் (Laurel) போல் பூக்களையுடைய ஒரு மரத்தினின்றும் மணமுடைய எண்ணெய் இறக்கப்படுவதாகவும், அதனைக் கிரேக்கர் முரோரோடா (Murorada) என்று கூறுவதாகவும், அது இந்தியரால் கார்ப்பியன் என்று சொல்லப்படுவதாகவும் எழுதுவர். மிகைபடக் கூறலுக்கு வேண்டுமான அளவு நீக்கிவிடினும் தேஸியஸினுடைய விவரத்திலிருந்து இங்குக் கூறப்பட்டது கருவாப்பட்டைத் தயிலம் என்று ஏற்படுகின்றது. இந்த அபிப்பிராயத்தை வாலும் (Wahl) ஒப்புக்கொள்ளுகின்றார்.

பைஸாண்டியத்திலிருந்த ஸ்டீவன் என்பார் எழுதிய புத்தக மொன்றில் அரபிய அபிஸீனியர்கள் கேர்பதன் என்ற பண்டமொன்று விளைவிப்பதாக யூரணியஸ் (Uranius) என்பவர் கூறுவதாக எழுதியுள்ளார். இதனால் அபிஸீனியர்கள் தங்கள் நாட்டில் விளைவித்தனரென்பதைக் காட்டிலும் அப்பண்டத்தில் வாணிபம் செய்தனர் என்று கூறுவது மேலாகும். அது எழுதப்படுகிற சந்தர்ப்பத்தை நோக்கிக் கெர்பதன் என்பது சின்னமன் (கருவா) என்றும், கெர்பத், கிர்பா என்று அரபு பாஷையில் கருவாவுக்கு வழங்கும் பெயர்கள் இதினின்றும் தோன்றியவை என்றும் கூறுவதில் பிழைபடமாட்டோம். அழுகுபடச் செய்தல் என்று பொருள் தரும் கரபா (Karafa) என்ற சொல்லிலிருந்து கிர்பா (Kirfa) தோன்றியிருக்க வேண்டும் என்று சில அரபு பண்டிதர்கள் நினைக்கின்றனர். ஆனால் ஹஸூன் (Hassoun) என்பவர் இவ்வாறு கொள்ள மறுத்து இது ஒரு வேற்றுநாட்டுமொழி யென்றே கூறியுள்ளார். இவ்வாறாக, தேவியஸ் கூறிய கார்ப்பியன் என்ற சொல்லுக்கோ, அது குறிக்க எழுந்த இந்தியச் சொல்லுக்கோ நாம் வர வேண்டியிருக்கிறது. இந்தச் சொல்லின் பழமையை நாம் அறிவோமாகையால் கிரேக்கரேனும் இந்தியரேனும் அராபியாவிலிருந்து கடன் வாங்கினர் என்று சொல்ல வியலாது. அவ்வாறாயின் தேவியஸ் குறித்த இந்தியச் சொல் தான் யாது? வடமொழி குருந்தவிலிருந்து வந்த சிங்களச் சொல்லான குருந்து அன்று. ஆனால் தமிழ் - மலையாளச் சொல்லான கருப்பு அல்லது கார்ப்பு ஆகும். கரப்பத்தயிலம் என்ற சொல்லை நோக்குக. இந்தச் சொல்லின் வேறு பாடுகளாவன: கரப்பு, கருவ, கருவா. கருவா என்பதே

தமிழில் வழங்குந் தற்காலச்சொல். தான் மலையாளத்தில் வசித்தபோது அங்குச் செய்யப்படும் உயர்ந்த எண்ணெய்களெல்லாம் அந்தக் கரையிலுள்ள கருவா அல்லது காட்டு லவின்னமன் மரத்தினது இலை வேர்களிலிருந்து வடிக்கப்பட்டதாகும் என்றும் இதனைக் கருவா [1] என்றே மக்கள் வழங்கினர் என்றும் ரீட் (Rheede) எழுதுவர்.

7. தமிழ் - மலையாள மொழியில் கரு [2] என்ற பகுதிக்கு இருபொருளுண்டு. அவை கருமை, உறைப்பு என்பன. பின்னதான உறைப்பு என்ற பொருளே லவின்னமன் என்னும் கருப்புக்கு ஆதாரமாம். இதனோடு ஒற்றுமையுடைய சொல் கருக்கு என்பது. இது கஷாயம் [3] என்று பொருள்படும். பட்டை தித்திப்போடு கூடிய உறைப்பாயிருப்பதோடு அதன் எண்ணெயும், அதிக உறைப்பாயிருப்பது கொண்டு லவின்னமனுக்கு இந்தப் பெயர் வந்திருத்தல் கூடும். தேவலியஸாலும் அரேபியர்களாலும் சொல்லப்பட்ட பெயருடைய அந்த மரங்கள் இன்றும் அதே பெயரோடு மலையாளக்கரையில் அதே இடங்களில் ஏராளமாய்ப் பயிரா

---

1. **கருவா.** இந்தக் கருவா மரத்தின் பட்டை இலவங்கப் பட்டை என்றும் கருவாப்பட்டை என்றும் வழங்கும். இன்றும் இதன் பட்டையைத் தமிழ் மக்கள் ஊனுக்கு மசாலையோடு அரைத்துச் சேர்ப்பர். Cinnamomum zeylanicum என்பது நல்ல கருவா மரம். Cinnamomum iners என்பது காட்டுக் கருவா மரம். கிராம்பானது இலவங்கம் என எவ்வாறு பெயர்பெற்றது என்பது அறியக் கூடவில்லை.

2. **கரு** என்ற சொல் உறைப்பு என்ற பொருளில் சென்னைப் பல்கலைக்கழக அகராதியில் காணப்படவில்லை.

3. **கஷாயம்.** கருக்கு வேறு; கஷாயம் வேறு. **கருக்கு** என்பது மருந்துச் சரக்குகளை நறுக்கிச் சிறிது நீரிலிட்டுச் சுட வைத்து இறுத்துக் கொள்வது. கஷாயம் அவைகளைச் சுண்டக் காய்ச்சி இறுப்பது.

கின்றன. இலங்கையிலுண்டாகும் மரங்கள் இவைகளைவிடச் சிறந்தவை என்பது உண்மை. ஆயினும் அவ்வளவு முற்காலத்திலேயே இலங்கையில் இந்த வகை மரங்கள் பயிரிடப்பட்டனவா வென்பது ஐயத்துக் கிடமுடையது. மேலும் தேஸியஸ் இந்தியாவைக் குறித்துச் சொல்லிய சொற்களெல்லாம் பாரசீக, பாபிலோனிய வணிகரிடமிருந்து அறிந்தவையாகும். இலங்கையைப்பற்றி அவர்கள் யாதும் அறியார். வடமொழியிலுள்ள கர்ப்பூரம்[1] என்ற சொல்லானது தமிழ் - மலையாளமான கருப்பு என்ற சொல்லிலிருந்தும் தேஸியஸின் கார்ப்பியன் என்பதிலிருந்தும் தோன்றியது என்பதில் ஒரு சிறிதும் ஐயப்பாடில்லை. இவைகட்கு வடமொழியில் மூல மொழி இல்லாமையும் கர்ப்பூரமும் கருவாவும் சம்பந்தமுடைமையும் கவனிக்கற்பாலன.

வாணிபப் பொருளான கர்ப்பூரம் ஒருவகை கருவை மர[2]த்திலிருந்து செய்யப்படுகிறது, தேஸியஸின் சொல்

---

1. கர்ப்பூரம் ஆங்கிலத்தில் Camphor எனப்படும். Cinnamomum Camphora என்பது லத்தீன். **கர்ப்பூர** என்பது வடமொழி. இந்தக் கர்ப்பூரம் பலவகைப் படுமென்பது **சிலப்பதிகார** உரையால் விளங்கும். அவற்றுள் ஒன்று **ஆரூர்க்கால்**. இது திரு ஆரூரினைக் குறிக்கும். அந்த ஊரில் **ஸ்ரீ** தியாகேசப் பெருமானுக்குக் கர்ப்பூரம் கொடுக்கும் ஒரு பழமையான குடும்பம் இருந்து வருகிறது. அவர்களுடைய முன்னோர் கர்ப்பூரம், அதன் வகையான பச்சைக் கர்ப்பூரம் இவைகளைச்செய்யும் முறையை நன்கு அறிந்திருந்தனர். **பிருகத் கதை**யில் கர்ப்பூர சம்பவநாடு என்ற தீவுக்கு நரவாகனன் சென்று அந்த நாட்டு அரசனுடைய மகளான **கர்ப்பூரிகை**யை மணந்து கொண்டு திரும்பியதாகவும் நாம் படிக்கிறோம். அவன் அந்த நாட்டுக்குக் கடலைப் பறந்து சென்று தாண்டியதாகக் கூறப்படுகின்றது. கர்ப்பூரம் பர்மோஸோ, ஜப்பான் முதலான இடங்களில் மிகுதி.

2. **கருவைமரம்.** சூடன் அல்லது கர்ப்பூரம் ஒருவகை மரத்தின் இலை கொம்புகளைப் போட்டு எரித்து எடுக்கப்படுகிறது.

தமிழ்-மலையாளமான கருப்பு என்பதிலிருந்து தோன்றியது என்பது ஒப்புக்கொள்ளப்படுமாயின், எபிரேய மொழியிலுள்ள தூகி என்ற சொல் கு, கை என்ற எழுத்துக்களைப் பெற்றதுபோல இந்தச் சொல்லும் பு என்ற தொழிற்பெயர் விகுதிபெற்றுத் தோன்றுவது இயல்பு என்றும், கிரேக்கரால் ஆளப்பட்ட பழமையான தமிழ்மொழி யொன்று கண்டோமென்றும் கொள்ளலாம்.

8. பழங்காலத்தில் எழுதப்பட்ட நூல்களில் வடமொழி கலவாது நிற்கும் தனித்திராவிடமொழிகளின் [1] சின்னங்கள் காணப்படுதலாகிய சிறப்பியல்பு கிரேக்க பூகோள நூலாசிரியர்களாகிய தாலமி [2], பேரிபுளூஸ் ஆசிரியர் [3] இயற்கைச் சரித்திரம் எழுதிய பிளைனி[4] யுட்பட்ட நூலாசிரியர்கள்

---

இது சம தட்பவெப்ப நிலையான நிலங்களிற் பயிராவது. இது அநேகமாக இலை, மரம், நிறம், வளர்ச்சி முதலாயவற்றில் மகிழ மரத்தை ஒத்திருக்கிறது. இந்த மரங்கள் நீலகிரியிலுண்டு.

1. **தனித் திராவிடமொழி.** வடமொழி கலவாத தனித் தமிழ்ச் சொல் அளவற்றன திருக்குறள், தொகை நூல் முதலாயவற்றில் காணப்படுதலை கால்டுவெல் அறியார்.

2. **தாலமி.** Ptolemy. இவர் கிரேக்க தேசத்தினர். இந்தியா, மலேயா நாட்டைக் குறித்து எழுதியவர்களுள் ஒருவர். இவரது காலம் இரண்டாம் நூற்றாண்டு.

3. **பேரிபுளூஸ் ஆசிரியர்.** பெரிபுளூஸ் என்ற சொல் யாத்திரைக் கையேடு என்று பொருள்படும். முற்காலத்திலே ஐரோப்பாவுக்கும் இந்தியா சீனா முதலாய நாடுகளுக்குமுள்ள வாணியம் முழுவதும் எகிப்தியர் துருக்கர் மூலமாக நடந்து வந்தது. அதனாலே யவன யாத்திரிகன் ஒருவன் துணிந்து கப்பலேறித் தென்னிந்தியா வந்து திரும்பிச் சென்றான். அவன் ஒரு கையேட்டுக் குறிப்பு எழுதி யிருக்கிறான். காலம் கி. பி. முதல் நூற்றாண்டு. இது தமிழில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது.

4. **பிளைனி.** இவர் ஒரு யவனாசிரியர். இவர் இயற்கைப் பொருள்களைக் குறித்து விவரமான நூல் ஒன்று எழுதியிருக்கின்றார்.

பலர் எழுதிய நூல்களில் காணப்படும் குறிப்புக்களாகும். இந்தப் பூகோள சாஸ்திரிகளால் கிறிஸ்தவ சகாப்தத்தின் துவக்கத்தில் குறிக்கப்பட்ட ஊர், சாதிகள் இவற்றின் பெயர்கள் இன்றும் எழுத்துக்கு எழுத்து காணப்படுகின்றன. அவற்றுள் பல வழக்காறு ஒழிந்தும், இருக்குமிடம் தெரியாமலும் போய்விட்டன; ஆயினும் அந்தத் தொடர் மொழி (Compounds) களின் கருத்து தெளிவாக இருப்பதோடு அந்தப் பாஷைகளுக்குரிய சிறப்பியல்புகளும் ஒலி பற்றிய விதிகளும் நன்கு விளங்குகின்றன. சில திராவிடப் பெயர்களைக் கிரேக்க நூல்களிற் கண்டபடி கீழே குறிக்கின்றேன்.

9. ஹோ பாண்டியன் (Ho Pandion), ஹே சோர பாண்டியனன், (He chora Pandianon), காண்டிய ஞென் - இது பிழையுடையது, என்பவை பாண்டிய அரசனையும் நாட்டுமக்களையும் குறிக்கும். இந்தப் பாண்டியன் என்ற பெயர் வடமொழிச் சார்புடையது. மெகஸ்தனீசைப்[1] பின்பற்றி பிளீனி பண்டேயி (Pandae) என்று எழுதும் முறை வடமொழிக்கு நெருங்கிய உறவுடையதாக இருக்கின்றது. பிளீனியால் அண்மையில் நாட்டில் விசாரித்து எழுதிய செய்திகளும், தாலமி, பெரிபுளுவலில் கண்ட செய்திகளும், திராவிடச் சொல்லின் இயற்கை நிலையைக் காட்டுகின்றன. தமிழில் ஆண்பால் விகுதி அன் என்பதாகும்; ண், ட் என்பதன் முன் இ என்பது ஒலிமுறையாற் [2] றென்ற பாண்டியன் என்றாகும். மேலும் பன்மையில் பாண்டி

---

1. மெகஸ்தனீஸ். சந்திரகுப்த அரசனுடைய சபைக்கு வந்த கிரேக்க ஆதர்.

2. ஒலிமுறை. தமிழில் ஒலிமுறை இலக்கணமுண்டெனத் தெரியவில்லை.

யோனிஸ் என்றுங் காணப்படுவதால் தமிழில் ஆண்பால் ஒருமை பாண்டியன் என்பது தெளிவுறத் தோன்றுகிறது. அந்நாட்டு மக்களுக்கும் அரசனுக்கும் நாலமி அதே பெயரிட்டு எழுதியது சரியான காரியமேயாகும். நாட்டு மக்களைப் பாண்டியர் எனவும், அரசனைப் பாண்டியன், பாண்டிய தேவனெனவும் சொல்லுவர். புராதன (ஹலே) கன்னடத்தில் ஆண்பாலொருமை விகுதி அம்ஆகும். தெலுங்கில் உடு என்பது விகுதி; ஆகவே தெலுங்கில் பாண்டியுடு என்பது தமிழில் பாண்டியனைக் குறிக்கும். ஆதலினால் தமிழ்ப் பழங்காலமான கிறிஸ்தாப்தத் துவக்கத்தில் தமிழ்மொழியானது மற்றைய திராவிட மொழிகளினின்றும் அதனுடைய வழக்காற்று நிலையில் (Idioms) வேறுபாடுடையதாகவே இருந்ததேனும் அன்றுமுதல் இன்றுவரை ஆண்பால் விகுதி ஒரே விதமாகவே இருந்ததென்று அறிகின்றோம். மொடுரோ பாஸிலியோன் பாண்டியோனிஸ் (Modura Basileion Pandionis) என்ற தொடரிலிருந்து பாண்டியர் தாமிரபர்ணிக் கரையிலிருக்கும் கொற்கையிலிருந்த [1] தங்கள் தலைநகரைக் கிறிஸ்தாப்தத்திற்குமுன்னரே மதுரைக்கு மாற்றிவிட்டனர் என்று அறிகிறோம். மொடுரா என்பது (பிளினி-மொடுரா Modura) வடமொழிச் சொல்லான மதுரா என்பதனைக் குறிக்கும். இதனைத் தமிழ்வழக்குப்படியே கிரேக்கர் சொல்லுவர். வட இந்தியாவில் இதே பெயருடைய நகரமான மட்ராவை [2] கிரேக்கர் மெதுரா (Methura) என்று எழுதுவர்.

1. **கொற்கை.** முதலாம் நெடுஞ்செழியனது தலைநகராகக் கொற்கை இருந்ததென்றும் அவனே **அதுதையினி**டமிருந்து கூடல் என்ற மதுரையை வென்று தலைநகராகச் செய்தனனென்றுங் கூறுவர் திரு. சிவராஜ பிள்ளை. The chronology of the Early Tamils, 98.

2. **மட்ரா.** Mutra வடமதுரை.

10. ஹோர கேரபோத்ரோஸ் என்று (சேர அரசனைத்) தாலமி கூற, ஹோர கெப்ரோ போத்ரோஸ் என்று பெரி புளுஸ் கூறும். பின்னதிற் காணப்படும் ப் பிழையாக வந்த தென்பது தெளிவு; ஆயினும் ஆசிரியர் தாம் நேரிற்கண்ட வற்றைக் கூறியவராகையான் இவ்வாறெழுதியது படியெடுத் தோரின் பிழையாக இருத்தல்வேண்டும். பிளினியில் கேய் லோபோத்ரோஸ் என்று காணப்படினும், கையெழுத்துப் பிரதிகளில் கேலோ போத்ரோஸ் என்றே காணப்படுகின்றது. வடமொழியில் இந்தப்பெயர் கேரளபுத்ர என வழங்கும். கேர கேள என்பன கேரள [1] என்ற சொல்லின் திராவிடக் குறுக்கமாகும். ஆயினும் அவை மலையாளச்சொற்குறுக் கமேயொழிய தமிழ்ச்சொற் குறுக்கமன்று; கேரளபுத்திரர் அரசாண்ட நாட்டில் இப்பொழுது வழங்குவதும் மலையாள மொழியேயாம்.

11. ஸோரை நோமாடிஸ் (Sorai Nomades), ஆர்க் காடு பாஸிலியோன் ஸோரை (Arkatou Basileion Sorai), ஓர்த்தூரா பாஸிலியோன் ஸோர்நாகோஸ் (Orthoura Basileion Sornagos), பாளியா ஸோரே தோன் (Paralia Soreton), பாளியா தோரிங்கோன். இந்தப் பாளியா சோரதோன் என்பது கபேரோஸ் [2] முகத்துவாரத்தி லிருப்பதாக எழுதப்பட்டிருப்பதால் ஸோரிங்கோன் என்றி ருக்கவேண்டும். நாட்டின் நிலையைப்பற்றி முதலிற் கூறுது ஈண்டு காணப்படும் தொடர்மொழி பலவற்றுள்ளும் காணப் படும் சோர் என்ற சொல்லை ஆராய்வோம். அது தமிழ்நாட் டின்வடக்கிலுள்ள சாதியினரைக் குறிக்குமென்றுகூறுவேன்.

1. **கேரள.** சேரர், சேரலர் என்ற சொற்கள் கேரலா என் றாகிக் கேரளம் என்று நாட்டுக்கும் பெயராகி விட்டது. சகரம் ககரமாகவும் லகரம் ளகரமாகவும் மாறுவது இயற்கை.

2. **கபேரோஸ்.** காவேரியாறு.

இந்தச்சொல் வடமொழியில் சோல என்றும், தெலுங்கில் சோளா என்றும் கூறப்படும். இது தமிழில் ஸோழ அல்லது சோழ என்று வழங்கும். இந்நாட்டுச் சனங்களைக் குறித்துத் தாலமி கூறுவதின் பொருத்தம்-அன்றி அவருக்குச் சொன்னவர்கள் கூறுவதோ - மிக்க சிறப்புடையதாகும். அவர்கள் தமிழில் சோழர், சோழகர், சோழியர், சோழிங்கர் என்று கூறப்படுவர். அவர்கள் நாடும் சோழகம் எனப்படும். தமிழ்ச் சொல்லான சோழ என்பதிலுள்ள ழ என்ற எழுத்து ஒரு விநோதமான உச்சரிப்பையுடையது. அது தெலுங்கில் இல்லாததால் அதற்குப் பிரதியாக ட என்ற எழுத்தைத் தெலுங்கர் உபயோகிப்பர். வடமொழியிலும் பாலியிலும் அவை இல்லாததால் அவர்கள் முறையே ட, ள வை உபயோகிக்கின்றனர். கிரேக்கர் இக்காலத்தைப் போல அக்காலத்திலும் ர என்ற எழுத்தை உபயோகித்ததால் இது தமிழ்மொழியிலுள்ள ஒரு சிறப்பைக் காட்டுகின்றது. பாண்டிய அரசன், கேரள அரசன் பெயர்களைச் சொல்வதுபோல சோழ அரசன் பெயர் காணப்படவில்லை. அது எவ்விதமாக விருக்கலாமென்று ஊகிப்பதிலும் பயனில்லை. பழந்தமிழ் நூல்களிலிருந்து சோழரது தலைநகர் உறையூர் என அறிவோமாகலின் பாளியா ஸோரேதோனின் தலைநகராகக் காணப்படும் ஓரத்தூரா [1] என்பதை உறையூர் எனக் கொள்வது பிழைபடாது.

---

1. ஓரத்தூரா. இதுபொழுது உறையூர் என வழங்கும் ஊரே உறத்தூர் என வழங்கியிருத்தல் வேண்டுமென்று தோற்றுகிறது. இதுவே குறுகி உறந்தையாகியிருத்தல் வேண்டும். தித்தனுறந்தை. (அகம்.22)சோழ ரின்கடுங்கள்ளி னுறந்தை (அகம்.137) வளங்கெழுசோழருறந்தை. (குறுங். 116) சேந்தனுறந்தை (குறுந். 258). மற்றும்பல நூல்களிலும் இவ்வாறே வருதல் காண்க.

12. ஆர்காடு பாஸிலியோன் ஸோரா (Arkatou Basileion Sora) இங்குக் குறிக்கப்பட்டுள்ள ஆர்க்காடுஎன்பது நாடு, மக்கள், நகரைக் குறிக்காது அரசனைக் குறிக்கின்றது. கன்னிங்காம் தளபதி எழுதியதுபோல இங்குக் கூறிய சோரஎன்பதுஒருநகராகவும் ஆர்க்காடு என்பது அந்த நகரில் வாழும் ஒரு அரசனைக் குறிப்பதாகவும் கொள்ளவேண்டியிருக்கிறது. தாலமி இவ்வாறு கொண்டனரேனும், நாட்டு மக்கள் கூறினவற்றை இவர் தலைதடுமாறிக் கொண்டனர் என்று நினைக்கவேண்டியிருக்கிறது. சோர என்னும் பெயர் அந்த நாட்டு மக்களுக்கு இட்டு வழங்கியதாகும். தாலமியும் இவர்களைச் சோர நோமாடிஸ் (Sorai nomades)–நாடோடிச் சோழர் - என்று கூறுவர். ஆர்க்காடு என்பது இடத்தையும் சொல்லொற்றுமையையும் நோக்குங்கால் மகமதியர் காலத்தில் தலைநகராயிருந்த ஆர்க்காட்டுப் பட்டினம் என்பதில் ஐயமில்லை. சென்னைக்கும் கிழக்குத் தொடர்ச்சிமலைக்கும் நடுவணுள்ள ஆர்க்காடு உள்ளிட்ட நாடுகள் கிறிஸ்தாப்த காலத்தில் நாடுகளாயில்லாது ஆடுமேய்த்துத் திரியும் குறும்பர்[1] (Nomads) வசமிருந்தது என்று நாட்டுச்

---

1. குறும்பர். இவர்களே அருவர் ஆவர். அருவா, அருவா வடதலை நாடுகள் தொண்டை நாட்டுப் பகுதிகள். ஆர்க்காட்டில் வசித்தவர் அருவராவர். ஆர், ஆத்தி மரம் நிறைந்த காட்டில் வாழ்ந்தவர் அருவராகியிருக்கலாம். ஆர்க்காடு என்பதிலுள்ள இடையினத்தை வல்லினமாக்கி ஷடாரணியப் பெயருமிட்டுப் பிழைப்பட்டனர் பிற்காலத்தார். அழிசி யார்க் காடன்ன (குறுந். 258.) ஆர்க்காடு கிழான் (அகம். 64) இவைகளை நோக்குக. இதனைக் குறித்துத் திரு. சிவராஜப்பிள்ளை எழுதிய பழந்தமிழர் கால அட்டவணை - The chronology of the Early Tamils என்ற நூலில் அநுபந்தம் IV காண்க.

சரிதம் கூறுகின்றது. கன்னிங்காம் தளபதி தற்போதுள்ள ஆர்க்காட்டோடு[1] ஒப்பிடுவது பிழைபடுமெனக் கருதுகின்றார்; ஆயினும் யூல் சேனாதிபதி (Colonel Yule) முகமதிய சரித்திராசிரியரான இபன் படூடா (Ibn Batuta) 1340 வாக்கில் இந்த ஊரைக் குறித்துப் பேசுவதால் இந்தப் பட்டணம் பழமையுடையுடையதாகும் என்பர். இந்தப் பெயரின் உண்மைநிலை என்னவெனில் கூறுவேன். ஆற்காட்(Ar-kad)என்ற சொல் தமிழில் ஆறுகாடுகள்எனப் பொருள் படும். அந்த நாட்டில் வாழும் இந்துக்கள் இந்த ஊர் புராணங்களிற் காணப்படாவிடினும் மிக்க பழமையுடைய தெனவும், முற்காலத்திலிருந்த ஆறு இருடியர் இங்கு ஆறு பர்ணசாலை கட்டிவாழ்ந்தனர் எனவும் கூறுவர். இவர்கள்கூறும் பெயரொற்றுமை உண்மையாயின் தமிழ் மொழியின் தொன்மையும் அதனிற் காணப்படும் மொழிச்சிறப்பியல்பும் நன்குக விளங்கும்.

13. கரூரா பாஸிலியோன் கேரபோத்ரூ (Karoura baselieon kerobothrou). சேர, கேர, கேரள என்று சொல்லப்படும் சேரநாட்டு அரசரது தலைநகரெனப் பழந் தமிழ்க் கொள்கையாகக் கரூர் கூறப்படுகின்றது. இது சேர நாட்டோடுசேர்ந்த கோயம்புத்தூர் ஜில்லாவிலுள்ள கருவூர்[2]

1. ஆர்க்காடு. இது மிக மிகப் பழமையான தொரு பட்டணம். அழிசி என்ற தலைவன் ஆண்டஇடம் என்பது பழந் தமிழ் நூல்களால் விளங்குவது. ஆர் - ஆத்திமரம்

2. கரூர். இது பொழுது திருச்சிராப்பள்ளி ஜில்லாவைச் சார்ந்தது. ஆயினும் இங்குக் குறித்த கரூர் இதுவன்று. இது மேலைக்கரையில் பேராற்றங் கரையிலுள்ளது. கரூரைக குறித்த விவாதம் தமிழ் நாட்டில் தீர்ந்தபாடில்லை. கரிய ஊர் என்று பொருள்படுத்த வேண்டுவதில்லை. கரு என்ற சொல் முதன்மையைக் குறிக்கும்.

என்று கருதப்படுகின்றது. கரூர் என்னும் சொல் கரிய ஊர் என்று பொருள்படும். தமிழ் நாட்டிலுள்ள கல்வெட்டுக்களில் மிகுதியும் பயின்றுவரும் காழகம்[1] கடாரம்[2] என்ற சொற்கள் குறிக்கும் ஊரும் கரூரின் இலக்கியப் பெயராதல் வேண்டும் என நான் கருதுகிறேன். இங்குக் குறிக்கப்பட்ட பெயர்களின் பொருள் ஒன்றேயாம். தாலமி குறித்த கரூரா என்றசொல் சரியாக அந்த ஊரின் தமிழ்ப் பெயரைக்குறித்துளது. கர் (Kar) என்பது கருமையையும், ஊர், ஊரு என்பன நகரின் பெயரையும் குறிப்பனவாம். சென்ற 1800 ஆண்டுகளுள் இப்பெயர்களுள் ஒன்றேனும் மாறுபாடு அடையவில்லை.

14. மூடோ கலிங்கம் [3] நாமினே (Modo galingam nomine)—பிளினி. இந்தப் பெயரைக் குறித்து முன்னரே கூறியுள்ளேன். மூடோ என்ற தெலுங்குச் சொல் மூன்று என்னும் எண்ணைக் குறிக்குமாயின் இது பழமையான திராவிட பாஷையின் சிறப்பியல்புக்குப் பின்னுமொரு சான்றாக நிற்கிறது. மூடு என்பது தெலுங்கு, மூன்று தமிழ். மூரு கன்னடம் மூஜூ துளுவாகும்.

---

1. **காழகம்.** இது பர்மா பக்கத்திலுள்ளது. இதற்கும் கரூருக்கும் உள்ள இணைப்பு இன்னதென விளங்கவில்லை.

2. **கடாரம்.** இது மலேய தீபகற்பத்திலுள்ளது. இவைகள் கரூருக்கு எவ்வாறு சம்பந்தமுடையனவென்பது விளங்கவில்லை. இதற்கும் கரூருக்கும் என்ன சம்பந்தமோ விளங்கவில்லை.

3. **மூடோகலிங்கம்** என்பது திரிலிங்கம் என்பதைக் குறிக்குமெனவும் அது தெலுங்கு நாடான கலிங்கத்தைக் குறிக்குமெனவும் மூடு என்பது வடமொழியில் த்ரீ என வருமெனவும் முன்னர் எழுதியுள்ளார்.

15. தமரிகே (Damirice), ஸ்கைத்தியா திமிரிக்கே (Scytea Dimirice), பெதியுஞ்சர் அட்டவணை ரவண்ண பூகோளம் இவைகளின்படி திமிரிகா. இந்தச் சொல்லான திமிரிகேயிலுள்ள திமிர் என்ற பகுதி தமிழ் (Tamil) என்பதைக் குறிப்பதாகப் பர்னல் கருதினர்; அவ்வாறாயின் தமரிகேயிலுள்ள தமிர் என்பது அதற்கு மிகுதியும் ஒற்றுமையுடையதென்று கூறலாம். திமரிக்கே நாட்டிற்கு வடக்கிலுள்ள நாட்டைத் தாலமியும் பெரிபுளூஸ் ஆசிரியரும் ஆரியகம்[1] என்று கூறுவர். சில நூற்றாண்டுகளுக்குப் பின் வந்த வராஹமிசிரர்[2] இந்த நாட்டைத்தான் ஆரியகம் என்று கூறினர்போலும். ஆகையால் கிரேக்கர் இட்டழைத்த ஆரியர் திராவிடர் என்ற வகுப்பினரை மலையாளக் கரையில் அவர்கள் இட்டழைத்த நாட்டின் பெயரைக்கொண்டு நாம் அறிந்து கொள்வதோடு இந்த இடங்களில் வாழ்ந்துவந்தவர் ஆரியரும் திராவிடரும் என்றும் நாம் வேறு ஆதாரங்களிலிருந்தும் தெரிந்துகொள்ளுகிறோம்.

16. மலையாளக் கரையிற் காணப்படும் சில பெயர்களை மாத்திரம் குறிப்பிடுவதோடு நிறுத்துகின்றேன். முஸிரிஸ்[3] (Mouziris) முயிரிக்கோட்டையிலுள்ள முயிரியாகும்; திண்டிஸ்[4] (Tyndis) என்பது துண்டி; நெல் கிண்டாவிலுள்ள

---

1. ஆரியகம். இது கொங்கானம் மகாராஷ்டிரம் முதலிய பிரதேசங்களைக் குறிக்கும். பெரிபுளூஸ் ¶ 41 பார்க்க.

2. வராகமிசிரர். கி. பி. 6-ம் நூற்றாண்டிலிருந்த சிறந்த வடநூல் வானசாஸ்திரி.

3. முஸிரிஸ். பெரியாற்றங்கரையிலிருந்த முசிறித் துறை.

4. துண்டிஸ். கடலுண்டி என வழங்கும். இது சேரநாட்டு ஊர். பாண்டியருக்குச் சொந்தமான தொண்டி என்ற ஊர் கீழ்க் கடற்கரையிலுள்ளது.

கிண்டா[1]-மேல்கிண்டா தாலமி-இந்த ஊர் கேரளத்தின் தென்னெல்லையிலுள்ள கன்னேத்திரி (Kannettri) யாகத் தோற்றுகிறது. பிளீனியினுடைய கையெழுத்துப் பிரதிகளி லொன்று கிண்டன் என்று கூறுது கனிடன் (Canidon) என்று கூறுகிறது. முஸிரிஸ் என்ற ஊர் டாக்டர் குண் டர்ட் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது; மற்றைய இரண்டு ஊரும் பர்னலால் குறிக்கப்பட்டன.

17. கோட்டநரா[2] (Cottonara) - பிளீனி; கொட்ட நரிகே[3] (Kottonarike) - பெரிபுளூஸ்; இது நல்ல மிளகு உண்டாகும் இடம். தாலமி இந்த நாட்டைக் கூறுதது கவ னிக்கத்தக்கது. கொட்டநரா என்பது சில்லாவின் பெயராகக் காணப்படுகிறது. கொட்டநரிகோன் என்பது அந்த நாட் டில் விளையும் மிளகினது பெயராகும். டாக்டர் புக்கனன் என்பவர் இதனைக் கள்ளிக்கோட்டை நாட்டில் நல்ல மிளகு விளையும் இடமான கடத்தநாடு ஆகுமெனக் கருதுவர். தலைச் சேரியைச் சார்ந்ததாயும் மிளகுக்குப் பேர்போனதாயுமுள்ள குளத்தநாடு ஆகும் எனக் கருதுவர் பர்னல்ஆசிரியர். மலை யாள மொழியில் கடத்த என்னுஞ் சொல் வண்டியைக்குறிக் கும்; நாடு என்னுஞ் சொல் ஊர் என்றாகும்.

---

1. கிண்டா. இது நெல்கிந்தா, மெல்கிந்தா, நெல்சிந்தே என்று பலவிதமாகக் கூறப்படுகிறது. இந்த ஊரின் உண்மைப் பெயரும் இருக்குமிடமும் தெரியவில்லை.

2. கோட்டநரா. குட்டநாடு. இது திருவாங்கூர் ராஜ்யத் தில் ஒரு பகுதியாக இருக்கின்றது.

3. கோட்டநரிகே. ஷாப்பினுடைய பெரிபுளூவில் கொட்ட நரிகே என்று காணப்படவில்லை. கொட்டநரா என்றே காணப் படுகிறது.

18. சங்காரா[1] (Sangara) பெரிபுளூஸ் ஆசிரியர் ஒரே மரத்தில் குடையப்பட்டு கொட்டகராவிலிருந்து பரகே[2] (Barace) வுக்கு மிளகு கொண்டுபோன படகுகளை இந்தப் பெயரால் அழைப்பர். இந்தப் படகுகள் மலையாள மொழியில் சங்ஙாடம் என்று சொல்லப்படும். துளுவில் ஜங்காலா என்பர். வடமொழி ஸங்காடம் - தெப்பம் என்பதை ஒப்பிடுக. குலந்தியோ போண்டா[3] (Kolandio phonta) என்னும் பெயருடையதாய் மலையாளக் கரையிலிருந்து இலங்கைக்கும் கங்கைக்கும் சென்ற படகுகளின் பெயரை நிச்சயிக்க இயலவில்லை.

19. கோட்டியரா (Kottiara) ஆய்நாடு என்று தாலமியால் கூறப்பட்டதும் பாரளியா என்று பெரிபுளூஸ் ஆசிரியரால் கூறப்பட்டதுமான நாட்டிலுள்ள ஊரின் பெயர். இது தென் திருவாங்கூராகச் சொல்லப்படுகிறது. பிளினியின் கொட்டோரா (Cottora) வாகும். பெதிஞ்சர் அட்டவணையிற் காணப்படும் கொட்டரா (Cottara)வும் இதுவேயாகும். முன் கூறப்பட்ட கொட்டகராவையும் இதனையும் ஒன்முக எண்ணக்கூடாது. இது தாலமியால் கோட்டியரா தலைநகர் என்று கூறப்பட்டு மிகவும் முக்கியமான பட்டணமாகக் கருதப்பட்டது. கோட்டார் என்று ஐரோப்பியர்களால் வழங்கப்படுவதும் தென் திருவாங்கூரிலுள்ள பிரபல வியாபார ஸ்தலமுமான கோட்டாருக்க் கருதப்படுகிறது.

---

1. சங்காரா. பெரிபுளூஸ் ¶60 பார்க்க.

2. பரகே. வைக்கரை. இதனைக் கண்டுகூறியவர் வே. கனகசபைப்பிள்ளை யாவர்.

3. குலந்தியா போண்டா. இது பெரிபுளூஸில் காணப்படுகிறது. இந்த மரக்கலம் எவ்வாறிருக்குமெனச் சொல்வதற்கில்லை.

இந்தச் சொல்லானது கோடு, தமிழ் - மலையாளம் கோட்டை; ஆறு - நதி என்ற இருசொல்லாலான ஒரு பதம். முதற் சொல் பெயருரிச்சொற்பான்மைப் படுவதற்காக ட போன்ற எழுத்துக்களை இரட்டிப்பது[1] தமிழ்-மலையாள வழக்கு; மெல்லொற்று இரட்டிக்கும்போது அது வல்லொற்றுவது மற்றொரு விதி. ஆதலினாலே கோடு ஆறு கோட்டாறு என்று ஆயிற்று. இப்பொழுது கூறப்படும் ஊர் இதுதானென்று எனக்குத் தோற்றுவது உண்மையாகுமானால், இப்பொழுதைப்போல கிரேக்கர் காலத்திலும் இதே இலக்கணவிதி அமைந்திருந்தது என்பது வெளிப்படும்.

20. கோமரியா அக்ரோன் (Komaroia Akron)- தாலமி; கோமார், கோமரி[2] (Komarei)-பெரிபுளூஸ். குமரி முனையில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் துர்க்கா பரமேசுவரியின் மறுபெயரான குமாரி என்னும் பெயரால் அந்த இடம் வழங்குகிறது. குமார் என்று வழங்கும் இந்தச் சொல் சுத்தத் தமிழ்ச் சொல்லாகும். வழக்கில் குமாரீ என்பது குமரி என வரும். கொடுந்தமிழ் வழக்கில் (Vulgar) குமாரீ, குமாரி என்பன கன்னிப் பெண்ணுக்கு வழங்கவில்லை. ஆனால் அவைபோய், குமார், கோமார் என வழங்கும். இந்தக் கொடுந்தமிழ்ச் சொல் பெரிபுளூஸ் ஆசி

---

1. **இரட்டிப்பது**. ஈரெழுத்து மொழியும் உயிர்த்தொடர் மொழியும், வேற்றுமை யாயி னொற்றிடை யினமிகத், தோற்றம் வேண்டும் வல்லெழுத்து மிகுதி. (தொல். எழுத். 411)

நெடிலோ டுயிர்த்தொடர்க் குற்றுகரங்கள்
டறவொற் றிரட்டும் வேற்றுமை மிகவே. (நன்)

2. **கோமரி**. பெரிபுளூஸ் ¶58 பார்க்க.

ரியர் காலத்தில் கேட்கப்பட்டது ஆச்சரிய முடையதாகும் 'இதற்குப் பின்னர் குமார் என்று ஊர் இருக்கிறது; அதனில் ஒருகோட்டையுண்டு. கப்பற்சாலையும் ஒன்றுண்டு. அங்கே மக்கள் நீரரடித் தங்களைத் தூய்மை செய்துகொள்ளுதற் பொருட்டு வருகின்றனர். அங்கே ஒரு பெண் தெய்வம் மாதந்தோறும் வந்து நீராடியதாகக் கூறப்படுகின்றது' என்று பெரிபுளூஸில் காணப்படுகின்றது. துர்க்கா தேவியின் பொருட்டு மாதந்தோறும் இன்னும் நீராடப்பட்டுவரினும் முற்காலத்திலிருந்ததைப் போன்று அவ்வளவாக இப்பொழுது மக்கள் கூடுவதில்லை. ஐந்து நீராடற்றுறைகளில் குமரியும் ஒன்ருக இருந்தமையால் பெரிபுளூஸ் ஆசிரியர் கூறுவது உண்மையுடையதேயாம். கன்னியா குமரியில் கிரேக்கர் கண்ட கப்பற்றுறையும் கோட்டையும் கடல் நாட்டினுட் புகுந்ததால் இதுபொழுது காணுததாயிற்று. ஆயினும் கடலுள் காணப்படும் ஒரு பாறையில் நன்னீர்க்கிணறு ஒன்று காணப்படுகிறது. பெதிஞ்சர் அட்டவணையில் குமரி முனை காணப்படாதது மிகுதியும் கவனிக்கத்தக்கது.

21. பரளியா. தாலமியால் சோரடிபரளியா, தோராங்கி பரளியா என இரண்டும், பெரிபுளூஸ் ஆசிரியரால் ஒன்றும் ஆக மூன்று பரளியாக்கள் கிரேக்க ஆசிரியர்களால் கூறப்படுகின்றன. பெரிபுளூஸில் கண்ட பரளியாவானது தாலமி கூறும் ஆய்நாடும் தென் திருவாங்கூர் கரையார்நாடும் (தென் திருநெல்வேலி) சேர்ந்தது. இது கொல்லத்துக்குத் தெற்கிலுள்ள செம்மலை முதல் பாண்டியனுக்குச் சொந்தமான முத்துச்சலாபமிடும் கொற்கைவரையில் குமரியுள்படப் பரவியிருந்தது. பரளியா என்பதை டாக்டர் பர்னல் புரளி என்பதனோடு ஒப்பிடுவர். அது திருவாங்கூரின் பழய பெயரென்.

பர்; ஆயினும் இதனை நான் ஒப்பமுடியவில்லை. புரளி என்ற பெயர் திருவாங்கூருக்கு இருந்திருக்குமாயின் கிரேக்கர் பிறர் அறிந்துகொள்ளற்கு இயன்றவகையில் பொருள் படத்தக்கதாய்த் தம்மொழியி லாக்கிக்கொண்டிருப்பர்; இதற்கு மாருக இந்தக்கரை அந்தப் பெயரால் ஒருபொழுதும் அழைக்கப்பட்டதாகத் தெரியவில்லை. உள்நாட்டிலுள்ள கோட்டை யகம் என்ற ஊரின் அரசரது கோட்டையின் பெயர் என்று கூறுவர் மலையாள அகராதி ஆசிரியரான டாக்டர் குண்டர்ட். அதனாலே புரளிக்குத் தலைவன் என்று பொருள்படும் புரளீசன் என்பது இவர்களது பட்டங்களில் ஒன்ருயிற்று. இந்தப் பட்டம் திருவாங்கூர் அரசர்பேரிற் பாடப்படும் செய்யுள்களில் கூறப்பட்டு வருகிறது. அவர்கள் சேரரது பழய இராசதானியான கரூர் என்னும் வஞ்சியைக் கைக்கொண்ட பின்னர் வஞ்சிபூபதி என்ற பட்டத்தைக் கைக்கொண்டதை யொப்ப இந்தநாட்டைக் கைக்கொண்ட பின்னர் இந்தப்பட்டத்தையும் (புரளீசன் என்பதை) கைக்கொண்டிருத்தல்கூடும். பெரிபுளூஸில் காணப்படும் பாளியாவில் தென் திருவாங்கூர் மாத்திரமின்றி கொற்கையுட்பட்ட தென் திருநெல்வேலியும் சேர்ந்தது என்பது நினைப்பிலிருக்க வேண்டும். ஆதலினாலே பரளியா என்ற சொல் கிரேக்கச் சொல் எனவும் அது கடற்கரை என்று பொருள்படும் ஒரு தமிழ்ச் சொல்லைக் குறிக்க எழுந்தது எனவும் கொள்ள வேண்டும். பின்வருவதினின்றும் இது நன்கு விளக்கமாகும்.

22. ஹோய் கரியோய் (Hoi kareoi). தாலமியால் கூறப்பட்ட கரையார்கள் குமரிக்கும் கொற்கைக்கும் இடைப்பட்டகடற்கரையில் வாழ்ந்துவந்தனர்; ஆதலினால் இந்தநாடு பெரிபுளூஸில் கண்ட பரளியாவின் கீழ்பாகமாகும். கரை

என்ற தமிழ்ச் சொல் கடல் விளிம்பு (Coast), நீர்ப்பரப்பின் ஓரம் என்பதனைக் குறிக்கும். இது இல்லாமற்போதல், நீரினால் குறைந்துபோதல் என்ற பொருள்களைத்தரும் கரை என்னும் வினைப்பகுதி அடியாகப் பிறந்ததொரு பெயர்ச்சொல். இது கிரேக்க மொழியிலுள்ள பரளியா என்ற சொல்லை ஒத்த பொருளினையுடையது. திருநெல்வேலியைச் சார்ந்த கடற்கரைகளிற் பெரும்பகுதி கரை, கரைச்சுற்று என்று பேர்பெறும். இதன் வடக்கிலுள்ள செம்படவர்களைக் கரையார் என்பர். தாலமியால் கூறப்படும் முடிவிலுள்ள இரண்டு பெயர்களான கலைக்கரையஸ் (Kalai karias) பேரிங்கரை யென்பவை தமிழ்க் கரையையே குறிக்கும். பின்னது பெருங்கரை என்று எழுதப்பட்டிருந்தால் சுத்தத் தமிழ்மொழியாக விருக்கும். இதன் பொருள் நீர்நிலையைத் தாங்கும் பெரிய அணை என்பது. பெரும் என்பதிலுள்ள மகரம் 'ககரத்தின்முன் ஙகரமாகும்' என்ற இலக்கணவிதிப்படி ஆயிற்று. பெரு என்னுது பெரும் என்பது இலக்கிய முறை.

23. ஹே ஸோலென் (He solen). இந்தப் பெயரால் தாலமி கூறுவது திருநெல்வேலிஜில்லாவிலுள்ள முக்கிய நதியான தாமிரபர்ணி ஆதல்வேண்டும். குமரிக்கும் காவிரிக்கும் இடையில் அவர் கூறிய யாறு இது ஒன்றேயாகும். இதுவே முத்துவியாபாரத்துறையான கொற்கையில் கடலொடு கலப்பதாயுமுள்ளது. ஆயினும் இது எவ்வாறு ஸோலென் எனக் கூறப்பட்டது என்று விவரிப்பது கடினமாகவிருக்கின்றது. கிரேக்கபாஷையில் இந்தச்சொல் ஓடுள்ளமீன், சங்கு என்று பொருள்படும். நாட்டினர் ஸோலென் என்பதனை ஒத்த ஒரு பெயரால் இந்த யாற்றை அழைத்ததாலோ அன்றிக் கொற்

கையின் கடல் வாயிலில் அன்றும் இன்றும் முத்துச்சலாப மிடுதலாலோ இந்தப் பெயரைக் கிரேக்கர் வழங்கலாயினர் என்பது விசாரணைக்குரியது. இந்த யாற்றுக்கு எந்தக்காலத்தி லும் வழங்கும் பெயர் தாமிரபர்ணி என்பதாம். இது ஒரு வகையிலும் ஸொலென் என்பதனோடு ஒற்றுமையுடைய தாகக் காணப்படவில்லை. தமிழில் இது பொருனை என்று வழங்கும். இது பர்ணி என்ற வடசொல்லின் தமிழாகும். தாமிரபர்ணி என்ற சொல் சிவந்த அல்லது செம்பு நிற முள்ள இலைகளையுடைய மரம் என்று பொருள் தரும். இது யாற்றுக்கு இடப்பட்டதால் சிவந்த இலையை யொத்தது என்று பொருள்படும். இவ்வாறே இது மகாபாரதத்திற் கூறப்பட்டுளது; எனினும் அது தாலமி காலத்திற்கு முந் தியதோ என்பது வேறுவிஷயம். தாமிரபர்ணி என்ற பெயர் இலங்கைத்தீவிற் கிட்ட பழம்பெயரோடு ஒருவாறு ஒற்று மையுடையதாக விருக்கிறது. அது பாலியில் தாம்பபண்ணி என்றும் கிரேக்கமொழியில் தப்ரபனே என்றும் வழங்கும். கிரேக்கர் இலங்கைக்கு வழங்கிய பெயரை ஆற்றுக்கு இட் டிருந்தால் தப்ரபனே என்று கூறியிருப்பர். சியலூர் என்பது தாமிரபர்ணியின் உபநதியென லாஸன் (Lassen) பிழை படக் கருதுவர். அதற்கும் ஸொலெனுக்கு ஒரு சம்பந்தமு மில்லை. இந்த உபநதி சிறிய ஆறு என்ற பொருள்தரும் சிற்றாறு - சித்தாறு-என்று வழங்குவதோடு இது ஒரு சிறிய பகுதியின் நீரை வடியச் செய்கிறது. தாமிரபர்ணியே பெரும் பகுதியான நிலப்பரப்பை வடியச் செய்வது. ஆதலினாலே லாஸன் நினைத்தது பெரிய தவறாகும்.

24. பெட்டிகோ (Bettico). தாலமி கூறுவதன் பிர காரம் இது ஒரு மலை. இந்தமலையில் சோலெனென்னும்

தாமிரபர்ணியும் மேல்கடலில் விழும் பாரிஸ்[1] (Baris) என்ற ஆறும் அழிமுகம்[2] (Pseudostomos) - பெரியாறு- என்ற ஆறும் உற்பத்தியாகின்றன. இங்குக் குறிப்பிடப் பட்ட மலைத்தொடர் தென் தொடர்ச்சிமலையாகும். இது கோயம்புத்தூர் கணவா (பாலக்காடு)யிலிருந்து குமரிவரை தொடர்ந்து செல்லும் மலைத்தொடர். தாமிரபர்ணியானது அதன் முகத்துவாரத்திலிருந்தும், கிரேக்கர் மிகுதியாக வாணிபத்தின் பொருட்டு வந்து சென்ற கொற்கையிலிருந் தும் தெரியக்கூடியதான ஒரு கும்மட்டமான சிகரத்தி லிருந்து உற்பத்தியாகிறது. கிரேக்கர் இந்த நாட்டினரைத் தாம் கண்ட தாமிரபர்ணி எங்கு உற்பத்தியாகிறதென்று கேட்டிருப்பின் நாட்டினர் இந்தச் சிகரத்தைக் காட்டியிருத் தல் கூடும். கிரேக்கரும் இந்த மலைத்தொடர் முழுமைக்கும் தாம் கேட்ட பெயரை இட்டு வழங்கியிருப்பர். இந்த மலை யை ஆங்கிலர் அகஸ்தியர் என்று கூறுவர். அகஸ்திய மக ரிஷி திராவிடரை நாகரிகமுடையவர்களாகச் செய்தபின்னர்

1. **பாரிஸ்.** பாலாயி என்று யாறு. இது மேற்குத்தொடர்ச்சி மலையில் தோன்றித் திருவாங்கூர் இராஜ்யத்தில் ஓடி மேல்கடலில் கலப்பது.

2. **அழிமுகம்.** பெரியாறு கடலொடு கலக்குமிடம். பெரி யாற்றை அடைத்து வரும் நீரால் மதுரை ஜில்லாவில் பெரும்பகுதி சாகுபடி செய்யப்படுகிறது என்பது எல்லோரும் அறிந்தது. இந் தப் பெரியாறு மிகுந்த வெள்ளத்தைக்கொண்டு சென்று கடலில் கலக்கும்போது ஒரு இடம் விட்டு மற்றோரிடம் செல்லும். கோடையில் நீர் வற்றியபோது மேல்காற்றால் அந்தத் துறை தூர்ந்துபோவதும் மறுமுறை வெள்ளத்தில் வேறொரு சங்கமம் தோன்றுவதும் ஆறு கடலொடு கலக்குமிடத்திலுள்ளார் நன்கு அறிந்ததொரு செய்தி. அதனாலே கிரேக்கர் இதனை அழிமுகம் என்றனர்.

இந்த மலையில் தங்கியதாக ஐதீகம். இந்த மலையின் உண்மைத் தமிழ்ப்பெயர் பொதிகை என்பதாம். இந்தச்சொல் மூடுகை, ஒளிந்துகொள்ளுகை என்று பொருள்படும். இதன் பக்கத்தில் மற்றொரு சிறு குன்று இதேபேருடையதாக விருப்பதால் இதனைப் பெரிய பொதிகை என்றழைப்பர். இதன் பொருள் யாதாயினும் பேட்டிகோ என்பது சற்றேறக் குறைய போதிகையை ஒத்துளது.

25. கொல்கை எம்போரியம் (Kolchoi emporion). இந்த ஊரைத் தாலமியும் பெரிபுளூஸ் ஆசிரியரும் பாண்டியனுக்குச்சொந்தமான முத்துச் சலாபமிடும் துறை எனக் கூறுவர். குமரிக்குக் கிழக்கில் கிரேக்கர் வந்து சென்ற முதற்பட்டினம் இதுவே. இது சோலேன் ஆற்றுக்கு வடகரையிலுள்ளது. பெதிஞ்சர் அட்டவணையிற் கண்ட ஊர்களில் இதுவும் ஒன்று. அதனில் இந்த ஊர் கொல்கிஸ் இன்டோரம் (Colcis Indorum) என்று கூறப்பட்டுளது. மன்னார் குடாவை இந்த ஊரின் பெயரால் கோல்கிக்குடா என்று கிரேக்கர் கூறுவாராயினர். தமிழ்ப்பெயரும் கிரேக்கப் பெயரும் ஒருவாறு ஒற்றுமையுடையதே. இது தமிழில் கொல்க்கை என்று பேர்பெறும். இப்பொழுது புணர்ச்சி விதியினால் கொற்கை என்று சொன்னபோதிலும் மலையாளிகள் இந்த ஊரைக் கோல்க்கா என்றே கூறுவர். திருச்செந்தூரிற் காணப்படும் தமிழ்க் கல்வெட்டு ஒன்றிலும் இது கோல்க்கை என்றே எழுதப்பட்டுளது. அந்தக் காலத்தில் சப்த சாஸ்திரம் வெகுவாய்த்திருந்தியிராதாகையால் கிரேக்கர் இதனைக் கொல்க்கை என்று சொல்லவே கேட்டிருப்பர். சேரசோழ பாண்டியர்களாகிய சகோதரர் மூவரால் முதன் முதலாக அரசாங்க ஏற்பாடு இந்த ஊரிலேதான் உண்டாயிற்றென

மக்கள் நன்கு அறிவர். பின்வந்த பாண்டியர்களுள் ஒருவனை அதிவீரராமபாண்டியன் வெற்றிவேற்கையில் தன்னைக் கொற்கையாளியென்று கூறிக்கொள்ளுகிறான். இந்தஊர் இது பொழுது கடற்கரையிலிருந்துமூன்றுகட்டையளவுதொலைவு உள்நாட்டிலிருக்கிறது. ஆயினும் அது கடற்கரையிலிருந்த தற்குரிய அடையாளங்கள் பல இன்றும் காணப்படுகின்றன. அன்றியும் அது முத்துச்சலாபம் குளிக்குந் துறைமுகமென அங்குள்ள மக்களிடை நடமாடும் கன்ன பரம்பரைச் செய்தியையும் கேட்டேன். ஆற்றினால் இந்தத் துறைமுகம் மண் மேடிட்ட பின்னர் இதன் கிழக்கே ஒரு பட்டின முண்டாயிற்று. இது காயல் என்று நடுக்காலத்தில் பேருடையதாய்ச் சிறப்புற்றது. இதுவே மார்க்கோபோலோ குறிக்கும் காயல் (cael) ஆகும். காயலும் நாளடைவில் கப்பல்வியாபாரத்திற்கு உபயோகமற்றதாகவே, போர்த்துகேசியர் பரதவச்சேரியாகவிருந்த ஒரு ஊரைத் பெரிதாக்கித் தூத்துக்குடி என்று பேரிட்டனர். இதுவே சோழமண்டலக்கரையில் கடைசித் துறைமுகம். இப்பொழுது முத்துச் சிப்பிகளே இந்தக் கடலிலிருந்து மறைந்துவிட்டன என்றுசொல்ல மிகுதியும் வருத்தப்படுகிறேன். தூத்துக்குடித் துறைமுக வியாபாரம் இப்பொழுது பருத்தி வியாபாரத்திலிருக்கிறது. கொல்கையைக் கொற்கையெனக் குறித்தது மிக முக்கியமானது. இது நிச்சயப்படவே மற்றையவற்றையும் நிதானிப்பது எளிதாகின்றது. கொல் என்ற பகுதி இறக்கச் செய்தல் என்று பொருள் படும். கை என்ற சொல் மனிதஉறுப்புக்களில் ஒன்று. இரண்டும் சேர்ந்து கோல்லுங்கை எனப் பொருள்படும். அதாவது இது போர்ப்படையைக் குறிக்கும். ஆகவே முருடராக மக்கள் வாழ்ந்தகாலத்திலே அரசாங்க ஏற்பாடு ஆனதை இது

குறிக்கும். இந்த இரண்டு தமிழ்ச் சொற்களும் சம்பந்தப்பட்டவரை அந்நாள் தொட்டு இந்நாள்வரை இந்தப் பாஷை ஒருமாறுபாடும் அடையவில்லை; இருசொல் இணைந்ததால் ஓசைநயம் (Euphony) உண்டாயிற்றே தவிர வேறுபாடு ஒன்றும் தோன்றவுமில்லை.

26. கோரு (Koru):—கோரு என்பது அர்காரிக்குடா (Argaric Gulf)—பாக்ஸ் ஜலசந்தி [1] வாயிலுள்ள ஒரு தீவு என்று தாலமி கூறுவர். மற்றோரிடத்தில் அது ஒரு முனை என்பர். இவை இரண்டும் உண்மையே. கூர்மையாகச் செல்லும் ஒடுங்கிய நிலப்பரப்பையுடைய இராமேச்சுரமாக இதனைக் குறிப்போம். காலிமீர் முனைக்கும் இராமேச்சுரத் தீவுக்கும் இடையிலுள்ள குடாவை இராமதனுசு என்றும், இரண்டு முனையையும் கோடி என்றும் சொல்லுவதுவழக்கம். இந்த இரண்டு கோடிகளுள் மிகச் சிறப்பு வாய்ந்தது இராமேச்சுரம்.இந்தக்கோடியைக் கோரி என்றும் கோரு என்றும் கூறுவது இயல்பு. இது மேலே கூறியாங்கு மாறுமென்பதை

1. பாக்ஸ் ஜலசந்தி (Palk strait of Bay) இரண்டு பெரும் நீர்ப்பிரிவுகளைச் சேர்க்கும் ஆறுபோன்ற சிறிய நீரோட்டத்திற்கு ஜலசந்தி (Strait) என்று பெயர். கடல் வேதாரணியம் கோடிக்கரையில் வடக்குத்தெற்கிலோடும். அது நேர்கோணமாக மேற்கே திரும்புவதைத் தவிர வேறுபாடு ஒன்று மில்லை. ஆனால் கோடியிலிருந்து இலங்கையின் வடபாகமான யாழ்ப்பாணத்தைச் சார்ந்த பருத்தித்துறை காங்கேசன்துறை என்ற ஊர்கள் 36 கட்டை தொலையிலுள்ளன. தூத்துக்குடித்துறைமுகமும் விலோன் போட் மெயிலும் உண்டாவதற்குமுன் தபால் முழுமையும் கோடிக்கரையான காலிமீர் முனைக்குத் தோணிவழியாக வந்தே வடக்கே சென்றன.

எண்ணில் மிகப்பெரியதான கோடி என்பது ஆங்கிலத்தில் குரோர் (Crore) என்று வழங்குவதுகொண்டு தெளிவுபடும். கிரேக்கர் கூறிய பெயர் இன்னதென அறியாத போர்த்துகேசியர் இந்தக்கோடியை ராமன கோரு என்றுஅழைத்தது மிக்க ஆச்சரியத்தை விளைக்கும்.

27. கள்ளிகிக்கோன் (Kalligikon):-இராமேச்சுரத்தினுள்ள ஒடுங்கிய முனையான கோருவைத் தாலமி கள்ளிகிக்கோன் என்று கூறுவர். இவர் இதனைப் பிழைபடக்கூறுகிறார் என்று எண்ணவேண்டியிருக்கிறது. கள்ளிகிக்கோன் என்பது பிளினி கூறிய கலிங்கோன் (Kallingkon) என்பதோடு ஒற்றுமையுடையது. இது காலிமீர் முனை[1] யாக இருக்க வேண்டும் என்று எனக்குத் தோற்றுகிறது. வில்லின் இரு முனைகளாகக் கருதப்படும் இரண்டு கோடிகள் உண்மையாலும், ஒருகோடி காலிமீர் முனையாகையாலும் கோரு என்பதும் கள்ளிகிக்கோன் என்பதும் ஒன்று எனத் தாலமியை நினைக்கும்படி செய்ததுபோலும். காலிமீர் முனையின் தமிழ்ப் பெயர் கள்ளிமேடு[2]. கிரேக்கச்சொல் கல்லியும் தமிழ்க் கள்ளியும் ஒரு பொருளையே குறிக்குமெனத் தோற்றுகிறது.

28. கோலிஸ்[3] (Kolis):—தாலமிக்கு முந்திய கிரேக்க உரோம பூகோள நூல்களில் கோலிஸ் என்பது சிறப்பாகக்

---

1. காலிமீர் முனை (Point Calimere):—வேதாரணியம் கோடிக்கரை.

2. கள்ளிமேடு. இது வேதாரணியத்திற்கு மேற்கே 6 கட்டை தொலைவிலுள்ளது. கள்ளிமேட்டுக்கும் காலிமீர் முனைக்கும் சம்பந்தம் இருப்பதாகத் தெரியவில்லை. கோடியிலுள்ள கோயில் கோடிக் குழகர் என்று கூறப்படும். இது கடலுக்கு இரண்டு பர்லாங்குக்குள் இருக்கிறது.

3. கோலிஸ்:—இதனைச் சோலிஸ் என்று பம்போனியஸ் மேலா கூறுவது மிக ஒற்றுமையுடையதேயாகும்.. ஐரோப்பியர் c

கூறப்பட்டுளது. அது இலங்கைக்கு 7 நாள் பயணத்தில் தென் இந்தியாவிலுள்ள ஒரு இடமென்றும், அந்நாட்டினர் கோலியக்காய் (koliakoi) எனப்படுவர் என்றும் முதன் முதலாக ஸ்டிராபோவில் காணப்படுகிறது. ஸ்டிராபோ தமக்கு மூன்று நூற்றாண்டு முந்திய ஒனிஸ்கிரிடஸ் என்பவரைப்பின் பற்றிக் கூறுவதாகத்தெரிகிறது. அவர் இந்த இடத்திலிருந்து இலங்கை 20 நாட் பயணமென்பர். பம்பொனியஸ் மெலா இதனைக் கோலிஸ் (Colis) என்பர். இந்தப் பயணத்தை 4 நாட்களுக்குச் சுருக்கி இதனைக் கோலியகம் (Coliacum) என்பர் பிளீனி. அதனோடு இந்த இடம் இலங்கைக்குச் சமீபத்திலுள்ள ஒரு முனையென்றும், இதற்கும் இலங்கைக்கும் நடுவில் ஒரு ஆழமற்ற பவளக்கடல் உண்டென்றும் விவரிப்பர். பிறரைக் காட்டிலும் கோலிஸைக்குறித்து அதிகமாக

---

என்ற எழுத்தை k என்று உச்சரிப்பது இயற்கை. அதனாலேயே சோழமண்டலம் **கோரமாண்டல்** ஆகிவிட்டது. இதனை டாக்டர் கால்டுவெல்லும் கூறுவர். மற்றும் காவிரிப்பூம்பட்டினம், நாகப்பட்டினம், கோடிக்கரை இந்த ஊர்களிலிருந்து இலங்கைத் தீவுக்குக் காற்றுஉண்டானால் பன்னிரண்டு மணிநேரத்தில் செல்லலாம். காற்று இல்லாவிட்டால் இரண்டு நாளும் செல்லும். இஃதன்றிப் பயணம் செல்லும் தூரத்தையும் நேரம் பொறுத்தது. மேலேகூறிய துறைமுகங்களிலிருந்து பயணமாகிக் கரையோரமாகச் சென்றால் இருபதுநாளும் செல்லலாம். நடுக்கடலிற் புகுந்து குறுக்கே சென்று பருத்தித்துறை, காங்கயன்துறை சென்று, திருக்கோணமலை போகவேண்டுமானால் நான்குநாள் செல்லுவது அதிசயமல்ல. இராமேச்சுரம் இலங்கைக்குச் சமீபமாயினும் இங்குக் கிரேக்கர் கூறியது சோழரது பட்டினங்களில் ஒன்றே யாகும். சீன யாத்திரிகர் பலர் சீனாவிலிருந்து மலேயாநாடு வந்து கடலின் குறுக்கே **நாகப்பட்டினம்** வந்தே இலங்கை சென்றதாகச் சீன யாதிரிகரது குறிப்புகள் காணப்படுகின்றன.

எழுதும் டயோனிஸிஸ் பெரிகிடிஸ் என்பார் கவித்துவ முறையில் இதனை ஸிந்துவுக்குச் சமீபத்திலுள்ள அயோர்னிஸ் (Aornis) என்று வர்ணிப்பதோடு இலங்கை என்ற சொல் கோலிஸ் என்பதிலிருந்து வந்த பெயராக எண்ணிக் கோலியாஸ் என்ருெரு பெயரும் அதற்கு இட்டழைப்பர். தாலமியில் கோலிஸ் என்பது மறைய, கோரு என்பது தோன்றிற்று. ஆகவே கோலிஸ், கோரு என்பன ஒன்றே என்றும், இவை இலங்கைக்குச் சமீபமாக இருக்கும் இராமேச்சுரத்தையே குறிக்குமென்றும் நான் கருதுகிறேன். இப்பொழுதுள்ள பூகோள அறிவைக் கொண்டு தென்னிந்தியாவின் கடைக் கோடி குமரி எனக் கூற முற்படுவராயினும் தாலமிகாலத்திற்கு முற்பட்டதான பெதிஞ்சர் அட்டவணையில் நாம் கூறும் குமரிமுனை முனையாக இருந்ததில்லை. அந்தக்காலத்தில் தென்முனையாக இருந்தது இராமேச்சுரம். இங்கிருந்தே இலங்கைக்குச் செல்வது எளிதாகவிருந்தது. கோரிஸ் என்பது கோருவின் மரூஉ என நான் கருதவில்லை. அதற்கு மாருக இரண்டு சொற்களும் கோடி என்ற ஒன்றையே குறிப்பனவாகக் கருதுகிறேன். அதாவது அர்கரிக் குடாவின் முனைகளான காலிமீர் முனையையும் இராமேச்சுரத்தையும் அது குறிப்பதாகும். பம்பொனிஸ் மெலா இதனை ஒரு விட்டம் (Angulus) என்ருர். அதுவன்றி அவர் இந்தக் குடாவைமாத்திரம் குறிக்காது இந்தியநாட்டையும் குறிக்குமென்ருர். அவர் தென் கரையானது கீழ்பாகத்தில் அதனோடு முடிந்ததாகவும், அது ஸிந்துநதியிலிருந்து இந்த இடம் வரை ஒரே நேர் கோடாக வந்ததாகவும் கூறினர். கோலிஸ் என்ற சொல் கோருவைக் காட்டிலும் கோடிக்கு ஒற்றுமையுடையதாகத் தெரிகிறது. வடமொழி ட தமிழ் ழ, ள எழுத்துக்களைக் குறிக்குமென முன்னரே கூறியுள்ளேன்.

29. மல்லி, கோரம் மான்ஸ் மலேயஸ் (Malli, Quorum Mons Maleus):—பிளினி. இது கலிங்க நாட்டிற்கு வடக்கிலிருந்ததாகவும், கஞ்சத்திலுள்ள மஹேந்திர மலை எனவும் கன்னிங்காம் தளபதி கூறுவர். பிளினியில் கூறியபடி இந்தியாவிலுள்ள இடங்களை நிர்ணயிப்பது மிகக் கடினமாகவிருக்கிறது. மான்ஸ் மலேயஸ் என்பது எங்கிருந்த போதிலும் அந்தப் பெயர் எல்லோருமறிந்த தமிழ்ச் சொல்லேயாகும். தமிழ்ச் சொல்லான மலையர், ராஜமகால் பிரதேசத்திலுள்ள மலையர், மலேர் என்பவைபோல, மலேயஸ் என்ற சொல்லிலிருந்தே மக்கள் பெயரும் தோன்றியிருத்தல் கூடும்.

30. கிளமன்ஸ் அலெக்ஸான்டிரினஸ் என்பார் புத்த' என்ற சொல்லைப் புத்தா (Boutaa) என்றும் ஸ்ரீமணர் என்ற சொல்லைச் செம்னுய் (Semnoi) என்றும் கூறுவர். இவை புத்த'ம் சமணம் என்ற தமிழ்ச்சொற்களோடு பொருந்தியிருப்பது கவனிக்கத் தக்கது.

31. தாலமி கூறிய தென்னிந்திய ஊர்கள் பல ஊர், ஊரா என்பதில் முடிவது சிறப்புடையதாகும். அவர் அவ்வாறு இருபத்துமூன்று ஊர்களைக் கூறுவர். அவைகள் அதியாச்சரியமாகத் தமிழைப்போல் ஒலிக்கின்றன. ண்ட், ந்த், ம்ப்த் என்பன தமிழுக்குரியன.

32. தாலமி கூறிய பல பட்டணங்களின் பெயர்களிலிருந்து அவருடைய காலத்தில் பிராமணர் கர்ணுடகத்தில் நன்கு வேரூன்றிவிட்டனரென்றும், பல பட்டணங்களுக்குத் தங்கள் பெயரையிட்டு அழைக்கலாயினர் என்றும் அறிகின்றோம். மதுரா என்ற சொல் வடமொழி. அரசன் பெயரான பாண்டியன் என்ற சொல்லும் வடமொழி. மஞ்சளாறு

என்று பொருள் படும் கபேரஸ் (Chaberos) -காவேரி-திரா விடமொழியாயினும் வடமொழியாகக் கருதப்படுகின்றது. குமரியா - குமரிமுனை - வடமொழி என்பதில் ஐயமில்லை. கோரு என்பதும் வடமொழியாக விருக்கலாம். பெட்டிகோ மலையடிவாரத்தில் படவர் காடுவரை பிராமணர் (Brachmanai magoi) வாழ்ந்துவந்தனர் எனத் தாலமி கூறுவர். இந்தப் பிராக்மே (Brachme) என்பது பொதிகைமலைக்கு அண்மையிலுள்ள பிரமதேசமாக இருத்தல் கூடுமா? இந்தப் பிரமதேசம்[1] என்ற சொல் பல கல்வெட்டுக்களில் காணப் படுகின்றது.

33. தாலமி காலத்திற்குப் பல நூற்றாண்டுகளுக்குப் பின்னர்-இந்திய வாணிபம் கிரேக்கர் வசமிருந்து பாரசீகர் வசமானபோது-காஸ்மா இன்டிகோ'பிளஸ்டஸ் (Cosmos Indico Pleustes) என்பார் தமது கிறிஸ்தவ நில விவரணம் (Christian Topography) என்ற நூலில் இலங்கை மலையாளக்கரை இவைகளைக்குறித்துச் சில ரஸமான குறிப்புக்கள் வரைந்துள்ளார். அவற்றில் சில தமிழ்ப்பெயர்களும் காணப்படுகின்றன. அவர் மலையாளக்கரையை மலே (Male) என்ற சொல்லால் குறித்ததை முன்னரே குறித்துள்ளேன். இதனையன்றி அந்தக்கரையில் மிளகு விளையும் ஐந்து ஊர்களைக் குறிக்கின்றார். அவற்றுள் மூன்று பட்டணம் என்ற முடிவையுடையன. பட்டணம் என்ற சொல் வடமொழியென்று கூறினும் அது தமிழாகவே தோற்றுகின்றது. அவற்றுள் ஒன்றான புதுப்பட்டணம் என்பதிலுள்ள புது என்

1. பிரமதேசம்—இந்தப் பெயர் பிற்காலத்தில் சேர சோழ பாண்டியர் தானமாகப் பிராமணருக்குக்கொடுத்த ஊர்களின் பொதுப்பெயர். இது கிறிஸ்தாப்தத் துவக்கத்திற்கு ஒவ்வாது.

பது சுத்தத் தமிழ்ச் சொல்லாகும். அதே கரையில் வடக்கில் ஒரு ஊர் இதே பேரோடு இருக்கின்றது. அதனைக் கேரளர் தமது நாட்டு வழக்கு எனவே கருதுகின்றனர். காஸ்மஸின் புது (Poudou) என்பது தாலமி கூறும் பொதுதாப்பேருராவி லுள்ள பொதோ (Podo) என்ற சொல்லைக்காட்டினும் புது என்ற தமிழ்ச் சொல்லோடு ஒற்றுமையுடையது. யூல் சேனு பதி இந்த ஊரை இபன்படோ கூறிய போட் பட்டன் (Bod fattan) என்பதனோடும், நிகோலாகோன்டி கூறும் பெடி பிடனியா (Peudefitania) என்பதனோடும் பொருத்துவர்.

34. கிரேக்க பூகோளப் புலவர்கள் அவர்களது நூல் களிற் கூறிய ஊர்ப்பெயர்களைத் தவிர வேறுவிதமான பாஷைக்குறிப்பு ஒன்றும் கூறவில்லை. எனினும் அந்தப் பெயர்களினின்றும் நாம் அறியுஞ் செய்தி மிகச் சிறந்த தாகும். திராவிட மொழியைக்குறித்து நமக்குக் கிடைக்கும் சாதனம் பழமையான கிரேக்க ஆசிரியர்களால் குறிக்கப் பட்டனவேயாகும். அவர்கள் குறித்த சொற்களை யாராய்ந்து பார்த்ததிலிருந்து திராவிட பாஷைகளெல்லாம் சென்ற இரண்டாயிர வாண்டுகளாக ஒரே வழியில் (ரீதியில்) செல்லு வன என்றும், கிறிஸ்தாப்தத் துவக்கத்தில் எங்கெங்கு எந் தெந்த மொழி வழங்கினவோ அந்தந்த இடங்களிலேயே அவை இன்றும் வழங்குவனவாயின வென்றும் கண்டோம். கிரேக்க வணிகர் இந்தியா வருமுன்னரே இந்நாட்டில் எழு தும் முறை நடைபெற்றும், திராவிட மொழி யிலக்கணம் ஒரு வழிப்பட்டும், செய்யுள் இயற்றுந்திறமை மேம்பட்டு மிருந்தன. மற்றைய ஆசிய கண்டத்துப் பாஷையையொப்ப திராவிட மொழியும் இலக்கியமுறை யுண்டானபொழுது நிர்ணயமான ரீதிப்படியே இன்றும் நடந்து வருகிறது.

35. திராவிட பாஷை நான் நினைக்கிறபடி ஸித்திய வகை (Scythean Family) யைச் சார்ந்ததாயின், இது அதனோடு மிகப் பழயகாலத்தில் சம்பந்தமுடையதான தாகும். பே'ஹிஸ்டன் (Behistan) கல்லேடுகளைத் தவிரக் கிறிஸ்தாப்தத் தொடக்கம் வரை வேறு ஒரு சொல்லும் சித்திய மொழியைச் சார்ந்ததாகக் காணப்படவில்லை. பதினைந்தாம் நூற்றாண்டுக்கு முன் மாக்'யார் மொழி (Magyar) யில் ஒன்றும் எழுதப்பட்டதாகத்தெரியவில்லை: உக்'ரியன் (Ugrian) மொழி 40, 50 ஆண்டுகட்டுமுன்வரை எழுத்து வழக்கிலில்லை. கலெவெலா (Kalevela) என்ற பின்னிஷ் பாட்டு வாய்மொழியாக இன்றுவரை வருவதால் பல பல காலதேச வேறுபாடுகளை யடைந்துள்ளது என்று நாரிஸ் எழுதுகின்றார். உய்க'ர் (Wigur) என்ற கீழ்நாட்டுத் துருக்கர் நெஸ்தோரிய கிறிஸ்தவர்களிடமிருந்து எழுதக் கற்றுக் கொண்டனர். உய்க'ரிடமிருந்து மங்கோலியர் எழுதக் கற்றுக் கொண்டனர். ஆதலினாலே இவையிரண்டையும் நீண்ட நாள் வழக்கமுடைய திராவிட எழுத்துக்களோடு ஒப்பிடவியலாது. இப்பொழுது கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் சித்திய மொழிகளுட் சில சொற்கள் ஆல்ட்டாய்ப் பிரதேசத்தைச் சார்ந்த துருக்கருக்குச் சொந்தமானவையென்று சீனரால் கூறப்பட்டுள்ளது. அந்தப்பட்டியிலுள்ள எட்டுச் சொற்களில் அநேகமாக மூன்று-உறுதியாக இரண்டு-திராவிடச் சொற்களாகும். சீனர் கூறியாங்கு அவை வருமாறு:—

| ஆல்ட்டாய்த் துருக்கி | தற்காலத் துருக்கி | தமிழ் |
|---|---|---|
| கொரோ (Koro) | குவரா | கரு |
| கொரி (Kori) | கொரி | கிழ |
| கான் | க்கான் | கோன்,கோ |

36. கடைசியிற் கூறிய தமிழ்ச் சொல்லான கோ, கோன் என்பன துருக்க-மங்கோலிய பாஷைச் சொல்லான கான், க்கான், காகம் என்பவற்றோடு பொருத்தமுடையன என நான் உறுதியாக நம்புகின்றேன். உக்ரிய பாஷையினுட்பிரிவாகிய ஓஸ்டியாக் (Ostiak) என்ற பாஷையில் கோன் (Khon) என்ற சொல் உண்டு. பழய தமிழ்க் கல்வெட்டுக்களிலெல்லாம் வடமொழிச் சொல்லான ராஜா என்பதற்குப் பதிலாக கோ, கோன் என்ற சொற்களே உபயோகப்பட்டு வந்திருக்கின்றன. ஆனால் இதுபொழுது அச்சொற்கள் தனித்துவழங்காது பிறசொற்களோடு இணைந்தும், இடைச் சாதிப் பட்டப்பெயராகவும் வழங்குகின்றன. அரசன், இடையன் என்று பொருள்படும் இந்தச் சொற்கள் ஹோமர் கூறுவதை நினைப்பூட்டுகிறது.

37. இப்பொழுது காணப்படும் தமிழ் இலக்கியங்களைக் கொண்டு அந்த மொழியின் சரித்திரம் குறைந்தது கி. பி. இரண்டு மூன்றும் நூற்றாண்டுகட்கு முற்பட்டதெனக் கூறுதல் தகும். கிரேக்க பாஷையிலிருந்து நமக்குக் கிடைத்த தமிழ்ச்சொற்களால் இந்த பாஷை கிறிஸ்தவாப்தத் தொடக்கத்திலுள்ளதென்று நாம் அறிகிறோம். இப்பொழுது காணப்படும் பல மொழிகளையும் ஒப்பிட்டு ஆராய்வதால் அதற்கு முன்னர்த் திராவிடமொழி இருந்த நிலையை ஒருவாறு அறிந்துகொள்ளலாம். தமிழர் நாகரிகமும், தமிழ் இலக்கிய மேம்பாடும் கிறிஸ்தாப்தத் தொடக்கத்திற்கு ஆறு ஏழு நூற்றாண்டுகள் முன்னரே தொடங்கியிருத்தல் கூடும். ஆயினும் திராவிடர் இந்நாட்டுக்கு வந்த பிறகே அது பல வழக்குமொழிகளாகப் (Dialects) பிரிந்திருக்க வேண்டும். அவர்கள் வந்த காலம் வெகு புராதனமாக

விருக்கவேண்டுமேயொழிய இதுவெனத் திட்டமாகக் கூறுதல் இயலாது. கெல்ட்டிக் பாஷை ஐரிஷ், வெல்ஷ் வழக்குமொழிகளாகவும், டேடனிக் பாஷை பழமையான உயர்ந்தோர் பேச்சு தாழ்ந்தோர் பேச்சு எனவும், உக்'ரயின் பாஷை பின்னிஷ் மாக்'யர் வழக்குமொழிகளாகவும் மாறியது அந்தந்த வழக்குமொழிகளைப் பேசும் சாதியினர் அந்தந்த இடங்களில் குடியேறுமுன்னரேயாக விருக்கவேண்டும். அதற்கு மாறாகத் திராவிட பாஷையிலுள்ள வழக்குமொழிகளெல்லாம் அந்தந்த நாட்டினர் குடியேறிய பிறகே உண்டாயிருக்கவேண்டும். இவர்கள் இவ்வாறு அவரவர் தங்கிய இடத்தில் ஸ்திரப்பட்டது ஆரியர் குடியேற்றத்தின்பின் - நான் முன்னென்று நினைக்கிறேன் - ஆயின், வழக்குமொழிகளிற் காணப்படும் இலக்கண ஒற்றுமை ஆரியர் குடியேறின நூற்றாண்டுக்கு அடுத்த நூற்றாண்டி லிருக்கவேண்டும். பிராஹுவியில் திராவிட மொழியினை யொத்துக் காணப்படும் இலக்கணமுடிபுகளெல்லாம் பின்னும் பழமையுடையதாக விருக்கவேண்டும். பிராஹுவிபாஷை யொப்பினால் இந்தப் பாஷையின் தோற்றம் ஆரியர் இங்கு வந்த கி. மு. 1600 க்கு முன்னிருக்கவேண்டுமெனக் கொள்ளவேண்டியிருக்கின்றது. இந்த பிராஹுவி மொழியின் ஆராய்ச்சி திராவிடர் தங்கள் சொந்த நாடான மத்திய ஆசியாவை விடுமுன் திராவிட பாஷைகளின் தன்மையை ஒருவாறு விளக்கித் உபயோகமாகின்றது.

THE B. N. PRESS, MADRAS.

# தாலமி

தாலமி (Ptolemy) என்ற கிரேக்க பூகோள சாஸ்திரி கீழ்நாட்டுத் தேயங்களைக் குறித்து ஒரு நூல் எழுதியிருக்கின்றார். இவர் கி. பி. முதலிரண்டாம் நூற்றாண்டுக்குள் வாழ்ந்தவர் என்பது பலருடைய கருத்து. இவர் கூறிய அக்ஷாம்ச ரேகாம்சங்களும் (Lattitude and Longitude) விவரணங்களும் முழுமையும் ஒத்திராவிட்டாலும் இவர் கூறிய குறிப்புக்களெல்லாம் பிழைபட்டனவல்ல. இஃதன்றியும் சற்றேறக்குறைய 1800 ஆண்டுகட்கு முன்னரும் இப்பொழுது காணப்படும் ஊர்களும் இருந்தன எனக் காண்பதற்கு இவரது பூகோள விவரணம் பெரிதும் பயன்படுகிறது. ஆதலினாலே தமிழ்நாடும் பம்பாயும் சம்பந்தப்பட்டவரையில் அவர் எழுதியவற்றைக் காட்டி இப்பொழுது தெரிந்த குறிப்புக்களையும் ஈண்டு வரைகின்றேன்.

4. லரிகே (Larike)யில்

| | | |
|---|---|---|
| மோபிஸ் (Mophis) ஆற்றுமுகத்துவாரம் | 114° | 18° 20′ |
| பகிதரே (Pakidare) கிராமம் | 113° | 17° 50′ |
| மாலேவோ (Maleo) முனை | 111° | 17° 30′ |

5. பரிகசா குடாவில்

| | | |
|---|---|---|
| கமனே (Kamane) | 112° | 17° |
| நமதஸ் ஆற்றுமுகத்துவாரம் | 112° | 17° 45′ |
| நௌஸரிபா (Nausaripa) | 112° 30′ | 16° 30′ |
| புலிபுலா (Poulipoula) | 112° 30′ | 16° |

4. லரிகே யென்பது லார் (Lar) தேசமென லாஸன் (Lassen) அபிப்பிராயப்படுகிறார். குஜராத் மாகாணமென்பர் மக்ரிண்டில். குஜராத் மாகாண முதலியவற்றை லாட தேசமென்று கூறுவது இந்திய மரபு. மோபிஸ் என்பது மாஹிநதி. இது அரவலிமலைத் தொடரில் உற்பத்தியாகி பாலி, பலாசுனூர் வழியாக ஓடிக் காம்பேகுடாவில் விழுகிறது. மாலேவோமுனை என்பது மாஹியாற்றுக்கருகே நிலம் நீரில் நீண்டுள்ள பாகமாக இருத்தல்வேண்டும்.

5. பாரிகசாகுடா வென்பது காம்பேகுடா வாகும். புரோச் (Broach) என்ற நகரை யவனாசிரியர்கள் பாரிகசா வென்று கூறிவந்திருக்கின்றனர். கமனே என்பது பெரிபுளூஸ் 43 வது பகுதியிற் கண்ட கம்மனி என்ற சிற்றூர். நமதஸ் ஆறு நருமதையாகும். நௌஸரிபா என்பது நௌஸரி என்ற பேரோடு சூரத்துக்குத்தெற்கே 18 கட்டை தொலைவிலுள்ள ஓரூர். புலிபுலா என்பது பல்சார் என்ற கடற்றுறைக்குத்தெற்கே இருந்ததாகக் கருதப்படுகிறது.

6. ஆரியகே ஸதி'னோன் (Ariake Sadinon)

| | | | | |
|---|---|---|---|---|
| சுபாரா (Soupara) | 112° | 30′ | 15° | 30′ |
| கோவாரிஸ் (Coaris) ஆற்றுமுகம் | 112° | 15′ | 15° | 10′ |
| து'ங்கா (Dounga) | 111° | 30′ | 15° | |
| பெந்த'ா (Benda) ஆற்றுமுகம் | 110° | 30′ | 15° | 0′ |
| சிமில்லா (Simylla) அங்காடிப் பட்டினம் | 110° | 0′ | 14° | 45′ |
| ஹிப்போகுரா (Hippokoura) | 111° | 45′ | 14° | 10′ |
| பல்டிபட்ணம் (Baltipatna) | 110° | 30′ | 14° | 20′ |

ஆரியகமென்பது மகாராஷ்டிரப் பிரதேசம். இது தாலமிகாலத்தில் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது.

கடலோரத்தை ஸதிநேயிஸ் (Sadineis) என்றவர் அரசாண்டனர். ஒருபாகத்தைச் சாதகர்ணிகள் அரசாண்டனர். ஸதிநேயிஸ், சந்தாஸ் முதலியோரைச் சக, குஷாண அரசர்களாகக் கருதுவர் சரித்திர ஆசிரியர். சுபாரா என்பது சோபாரா என வழங்குகிறது. கோவாரிஸ் என்பது இன்ன ஆறு என நிச்சயமாகக் கூறுவதற்கில்லை. துங்கா என்பதைப் பிவந்தி (Bhivandi) நதியாகக் கருதுகின்றனர். சிமில்லா என்பது பம்பாயிக்கு 25 கட்டை தெற்கிலுள்ள செனல் என்ற ஊர். ஹிப்போகுரா என்பது குதிரைப் பட்டினமென்று பொருள்படும். இது எதுவென்று சொல்வதற்கில்லை. பல்டிபட்ண மென்பது பழைய பட்டணமென்று பெரிபுளூவில் காணப்படுகிறது; இதுபொழுது ட'ாபோல் என்று வழங்குகிறது.

## 7. கடற் கோள்ளைக்காரரது ஆரியகம்

| | | |
|---|---|---|
| மண்ட'கரா (Mandacara) | 113° | 14° |
| பை'சாண்டியம் (Bysanteion) | 113° 40′ | 14° 40′ |
| கெர்ஸோநெஸொஸ் (Khersonesos) | 114° 20′ | 14° 30′ |
| அர்மக'ரா (Armagara) | 114° 20′ | 14° 20′ |
| நாஞகு'ஞ (Nanagouna) ஆற்றுமுகம் | 114° 30′ | 13° 50′ |
| நித்ரா (Nitra) அங்காடிப்பட்டினம் | 115° 30′ | 14° 40′ |

கடற்கோள்ளைக்காரரது ஆரியகம் என்பது கொன்காணமாக இருக்கலாமென்பது ஐரோப்பியரது துணிபு. பதிற்றுப்பத்து நாலாம்பத்தில் களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல் கடற்கடம்பு எறிந்ததாகக் காண்கின்றோம். பிற்காலத்திலே காணப்படும் கடம்பர்களினின்றும் இவர்கள் வேறுவர். மண்டக'ரா என்பது மண்டகோரா என்று பெரிபுளூவில் காணப்படுகிறது. இது மாங்காட் என்று இதுபொழுது வழங்கு

கிறது. பை'சாண்டியம் என்பது பாஸ்பரஸ் ஆற்றிலுள்ள யவனர்களது சிறந்த பட்டினம். மேல்கரையில் யவனர்கள் குடியிருந்த ஊருக்குத் தங்கள் நாட்டுப்பெயரை இட்டனர் போலும். இது விஜயதுர்க்கம் என்ற பேருடையதாய் இரத்தினகிரியிலுள்ள வகோதனுற்றின் தென்கரையிலிருக்கிறது. கோர்ஸோநேஸோஸ் என்ற கிரேக்கமொழி தீபகற்பம் என்று பொருள்படும். கார்வார் பிரதேசம் கடலில் நீண்டிருப்பதால் இப்பெயர் பெற்றதுபோலும். இது செர்ஸிரோஸஸ் என்று பெரிபுளுஸில் காணப்படுகின்றது. அர்மகரா என்பது தப்தி (Tapti) நதியோரமாக வைக்கப்பட்டிருக்கிறது. ஆயினும் இது பிழையாகக் காண்கிறது. நாஞுக்'ஞு என்ற சொல் 'புண்ணியமுடையது' என்று பொருள்படும். மேலேத் தொடர்ச்சிமலேயிலுள்ள நாஞுவழியை ஆறு எனப்பிழையாகக் கருதினரென்று சில சரித்திர ஆசிரியர் கூறுவர். நித்ரா என்பது நறவு என்ற பழைய ஊர். கண்ணனூர் என்றும் மங்களூர் என்றும் சிலர் மயங்குவர்.

## 8. லிமிரிகே (Limyrike)

| | | |
|---|---|---|
| திண்டிஸ் நகரம் (Tyndis) | 116° | 14° 30′ |
| பிரமகரா (Bramagara) | 116° 45′ | 14° 20′ |
| கலேக்கரை (Kalaikarais) | 116° 40′ | 14° |
| முசிரிஸ் அங்காடிப்பட்டினம் | 117° | 14° |
| அழிமுகம் (Pseudostomos) | 117° 20′ | 14° |
| புதுப்பேரூர் (Podoperoura) | 117° 40′ | 14° 15′ |
| செம்னெ (Semne) | 118° | 14° 20′ |
| கரையூர் (Koreoura) | 118° 40′ | 14° 20′ |
| ப'க்கரை (Bakarei) | 119° 30′ | 14° 30′ |
| ப'ரிஸ் (Baris) ஆற்றுமுகம் | 120° 0′ | 14° 20′ |

8. லிமிரிகே யென்பது தமிழகம். கிரேக்க எழுத்தில் இச்சொல்லிலுள்ள த் என்ற எழுத்துக்கும் ல் என்ற எழுத்துக்கும் அதிக மாறுபாடின்மையால் தாலமி தவை லவாகப் படித்துவிட்டாரென்று கால்டுவெல் எழுதுகிறார். தமிழகத்தைப்பற்றி மிகுதியாகப் பெரிபுளூஸில் காணப்படுகிறது. திண்டிஸ் என்பது தொண்டி யென்ற கடலுண்டி. இதனை மலையாளம் ஜில்லாவிலுள்ள ஒரு கடற்றுறை ஊர் என்பர் மக்ரிண்டில்; கனகசபை கொய்லாண்டிக்கு அருகிலுள்ளதோர் ஊரென்பர். பிரமகராவென்பது பிராமண நகரம் என்றிருக்கலாமென்று ஆசிரியன்மார் ஊகிக்கின்றனர். அது இதுவாக விருக்கலாமென்று கூறுவதற்குப் போதிய ஆதாரமில்லை யெனினும் பிரமகுலமா யிருக்கலாமென்பர் கனகசபை. கலைக்கரை யென்பது கீழக்கரையென்ற ஊராகவிருத்தல் கூடும். கனகசபைப் பிள்ளை சாலைக்கரை யென்பர். முசிரிஸ் என்பது சுள்ளியம்பேரியாற்று...வறங்கெழுமுசிறி (அகம் 149) என்றமுசிறி. அழியாற்று முகம் என்பது பெரியாறு கடலொடு கலக்குமிடத்தைக்குறிக்கும். செதோஸ்தமஸ் என்ற கிரேக்கச் சொல் பொய் முகம் என்று பொருள்படும். பெரியாறும் வெள்ளத்துக்குத் தக்கவாறு மணலை அறுத்துக்கொண்டு மேல்கடலொடு கலக்கும். நீர் வறண்ட காலத்திலே கடல் மேல்காற்றினுல் மணலைக் கொண்டுவந்து ஆற்றுமுகத்தைத் தூர்த்துவிடும். பின்னெருக்கால் வரும் வெள்ளம் வேறொரு இடத்தையறுத்துக் கடலொடு கலக்கும். ஆகவே இவ்வாறு கலப்பதாலுண்டாகும் ஆற்றுமுகங்களைக் கொண்டு பொய்முகமெனப் பேரிட்டனர் போலும். இந்தக்காட்சி காவிரியாறும் அதன் கிளைகளும் கடலொடு கலக்குமிடத்துக் காண்பதொரு காட்சியேயாம். இவ்வாற்று முகம் அழிமுகமென்றே இன்னும்

மலேயாளத்தில் வழங்குவதாகக் கனகசபை கூறுவர். (The Tamils 1800 years ago, p 19). புதுப்பேரூர் என்பது உதயம் பேரூர். செம்னே என்பது செம்பை என்று வழங்குகின்றது. கரையூர் என்பது கொத்தூராக விருக்கலாமென வெண்ணிப்பர் கனகசபைப்பிள்ளை. பக்கரை யென்பது கொட்டயத்துக்கு அருகிலுள்ள வைக்கரை. அதனிலுள்ள குன்றை இன்றும் வைக்கரைக் குன்றென்பர். பரிஸ் என்பது முற்காலத்தில் கொட்டயம் வழியாகச் சென்று இப்பொழுது அழிந்துபோன பாளையாறு.

9. ஆய்நாடு

| | |
|---|---|
| மெல்கிந்த (Melkynda) | 120° 20′ 14° 20′ |
| இளங்கொன் (Elangkon) | |
| அங்காடிப்பட்டினம் | 120° 40′ 14° |
| கொட்டியரா (Kottiara) தலைநகர் | 12° |
| ப'ம்மலா (Bammala) | 121° 20′ 14° 15′ |
| குமரியாமுனை | 121° 45′ 13° 30′ |

9. ஆய்நாடு பொதியமலையும் அதனைச் சூழ்ந்த நாடுமாகும். ஆய்நாடு என்பதை யறியாது மக்ரிண்டில் அஹி என்ற வடசொல்லினின்றும் உண்டான பேரென்பர். பாலக்காடு கணவாய்க்குத் தெற்கேயுள்ள நாடு முழுவதும் ஆய் வழியினர் ஆண்டுவந்தனர் என்பது சிவராஜ பிள்ளையவர்களது துணிபு. ஆயர் இடையர் என்ற பேராலேயே ஹிடராஜா என்று அசோகனது ஷாபாஸ்கரி கல்வெட்டு கூறுமென்றும் அவரே கூறுவர். (The Chronology of the Early Tamils p 168). மேல்கிந்த என்ற ஊர் பெரிபுளுவில் நெல்கிந்த என்றும் பிளேநியில் நியாசிந்தை யென்றும் காணப்படுவதால் இதுவென நிச்சயிப்பதற்கில்லை. இளங்கோன் என்

பது விழிஞம் என்ற ஊர். இது முற்காலத்தில் வெளியம் என்று பேர் பெற்றிருந்தது. (அகம் 359). இதனைப் பலர் பலவாறு கூறுவர். வெளியம் அத்துச்சாரியை பெற்று வெளியத்து என்பது பலிதே Balite எனவும், விழிஞம் என்றுகி Velangkom என்று கிரேக்க மொழியில் எழுதப்பட்டு முதலிலுள்ள V என்ற எழுத்து மறைய இளஞ் எனவும் ஆயிற்று என்பர் சிவராஜபிள்ளை. கோட்டியரா என்பது கோட்டாறு என்பர். பம்மலா வென்பது பொன்னுணி யென்பர் கனகசபை. குமரி யென்பது கன்னியாகுமரியாகும். இது யாவரும் அறிந்ததே.

## 10. கரையார் நாடு

| | |
|---|---|
| *முத்துச் சலாபமிடும் கொற்கைக்குடா* | |
| *சொசிக்குரை* (Sosikourai) | 122° 14° 30′ |
| *கொற்கை அங்காடிப்பட்டினம்* | 123° 15° |
| சோலன் (Solen) *ஆற்றுமுகம்* | |

10. கொற்கையென்ற ஊர் பாண்டியர் வசப்படுமுன் கரையார் என்ற பரதவர் வசமிருந்ததாகப் பழந்தமிழ் நூல்கள் கூறும். கரையார் பரதவர் செம்படவர் படவார் என்பன நெய்தனில மாக்களைக் குறிக்கும் ஒருபொருட் பலபெயரென்பர். கடற்கரை யோரமாக வாழ்ந்ததால் கரையாரென்றும், பரதத்தை யுடைமையால் பரதர் பரதவர் என்றும், படவிற் செல்கையாலும், அதனை உடைமையாலும் செம்படவர், படவாரென்றும் பெயர்பெற்றன ரென்பர். இப்பெயர்களாலே இன்றும் அவர்கள் நிலைபெற்றுள்ளார். சோசிக்குரை யென்பது தூத்துக்குடி யென்பர். தோவுக்கு மாறுகச் சோவைக் கொண்டன ரென்பர். கோற்கை யென்பது காயற் பட்டினம். சோலன் என்ற யாறு இதுவெனக் குறிப்பதற்கில்லை.

## 11. பாண்டிநாடு

| | |
|---|---|
| ஆர்கலிக் (Orgalic) குடாவில் கள்ளிகிக் கொன் (Kalligikon) என்ற கோடி (Kory) முனை | 125° 40′ 12° 20′ |
| அர்கேரு (Argeirou) நகர் | 125° 15′ 14° 30′ |
| சாலூர் (Salour) அங்காடிப்பட்டினம் | 125° 20′ 15° 30′ |

11. பாண்டிநாடு தாலமிகாலத்தில் ஆலவாயான மதுரையும் அதனைச் சார்ந்ததுமாகக் கருதவேண்டும். பாண்டியர்கள் காலத்தில் ஆய் அரசரும் தென்பரதவரும் இருந்தனரென்று தாலமி கூறுவதாலே பாண்டிநாடு மிகக் குறுகிய பகுதியாக விருந்ததென்று தெரிகிறது. ஆர்கலிக்குடா வென்பது கோடிக்கரைக்கும் தொண்டிக்கும் நடுவில் வளைந்து செல்லும் கடலையோ பாம்பனுக்கும் குமரிக்கும் நடுவிலுள்ள கடலையோ குறிக்கும். கோடியையும் கள்ளிகிக்கொன் என்பதையும் ஒன்று என்று தாலமி கூறுகின்றார். கோடியென்பது தனுஷ்கோடி என்று வழங்கும் பாம்பன் முனை யென்றும், கள்ளிகிக்கோன் என்பது கால்மீர் முனை யென வழங்கும் வேதாரணியத்தை யடுத்த கோடிக்கரை யென்றுங் கூறுவர் மாக்ரிண்டில். பாம்பன் முனைக்கும் வேதாரணியம் கோடிக்கும் மிகத் தொலைவு. முன்னது பாண்டி நாட்டைச் சார்ந்தது. பின்னது நடுச்சோழ நாடு. இரண்டும் ஒன்றாகாது. மேலும் அவர் கள்ளிகிக்கொன் என்பது கள்ளிமேடு என்பதன் திரிபு என்பர். சாலூர் என்பது மதுரைக் காஞ்சியிற் கண்ட சாலியூராக விருக்கவேண்டுமென்பது கனகசபையின் துணிபு.

## 12. படவர் (Batoi) நாடு

| | | |
|---|---|---|
| நிகமா (Nikama) தலைநகர் | 126° | 16° |
| தெல்கேயர் (Thelkheir) | 127° | 16° 10′ |
| குருலா (Kouroula) ஒருபேரூர் | 128° | 16° 0′ |

## 13. பரளியா என்று கூறப்படும் தோரங்கியர் (Toringoi) நாட்டில்

| | | |
|---|---|---|
| *பேரஸ் யாற்றுமுகம்* | 129° | 15° 15′ |
| *காவிரி அங்காடிப்பட்டினம்* | 128°30′ | 15° 40′ |
| *சபுராஸ் (Sabouras) அங்காடிப்பட்டினம்* | 130′ | 14° 30° |

12, 13. *படவர் என்பார் தஞ்சைநாட்டினர் என்பர் மாக்ரிண்டில். வேட்டுவர் என்பர் கனகசபை. இவர்கள் யாரெனத் திட்டமாகக் கூறக்கூடிய சான்றுகளைக் கண்டோமில்லை. சிவராஜ பிள்ளையும் பாண்டி நாட்டுக்கும் சோழநாட்டுக்கும் நடுவில் வேட்டுவர் என்ற நாகர் வாழ்ந்தனரென்றும், கானப்பேரெயில் ஏழெயில் முதலியன அவர்களுடைய கோட்டைகளென்றும் கருதுவர். அங்ஙனமாயின் அந்நாடு சோழநாட்டின் தெற்குப் பகுதியாகவே, நாகை முதலாய ஊர்கள் சேர்வதற்கு ஆதாரமில்லை. நிகமாஎன்பது நாகபட்டினம் என்பர் மக்ரிண்டில். கனகசபையும் அதனை யொருவாறு ஒப்புக்கொள்வர். நிகமா என்பது நாகையாயின் தேல்கேயர் என்பது திருத்துறைப்பூண்டி தாலூக்காவிலுள்ள தலைஞாயிறாக இருத்தல் கூடும். பரளியா என்ற கிரேக்கச் சொல் கடற்கரை யென்று பொருள்படும். காவிரி கடலோடு கலக்குமிடம் நெய்தலங்கானலெனப் பெயர் பெற்றிருந்ததாகத் தமிழ் நூல்களால் அறிகிறோம். பரளியா வென்பது அதனைக் குறித்தலுங் கூடும். கபேரிஸ் என்பது காவிரிப்பூம் பட்டினம் என்பர். இது கடலாற்கொள்ளப்பட்டது. இது பொழுது இருக்கும் ஊர் அதற்கு 4, 5 கட்டை மேற்கிலேற்பட்டிருக்கிறது. சபுராஸ் என்பது இதுவென விளங்கவில்லை.*

## 14. அருவாளர் (Arouarnoi)

| | | |
|---|---|---|
| படுகை (Podouke) அங்காடிப்பட்டினம் | 130° 15′ | 14° 30′ |
| மாலங்கை (Melonge) அங்காடிப் பட்டினம் | 131° | 14° 20′ |
| பெண்ணையாற்றுமுகம் | 131° 40′ | 12° 45′ |
| கொட்டிஸ் (Kottis) | 132° 20′ | 12° 10′ |
| மணற்பா (Manarpha) சந்தை | 133° 01′ | 12° |

## 15. மைசோலியா (Maisolia)

| | | |
|---|---|---|
| மைசோலஸ் ஆற்றுமுகம் | 134° | 11° 40′ |
| கொண்டகோவிலா சந்தை | 134° 30′ | 11° 40′ |
| கொட்டூரா (Koddoura) | 135° | 11° 30′ |
| அல்லோஸிஞே (Allosygne) சந்தை | 135° 40′ | 11° 20′ |
| கிரிஸேக்குச்செல்லும் கப்பல் புறப்படுமிடம் | 136° 20′ | 11° |

அருவாநாடென்பது வெள்ளாற்றுக்கு வடக்கும் பாலாற்றுக்குத் தெற்குமுள்ள நாடு. இங்கே அருவாளர் என்ற குறும்பர் வாழ்ந்தனர். இந்த அருவாநாடு என்றபெயர் 10-வது நூற்றாண்டுவரை வழங்கி வந்ததாகக் கல்வெட்டுக்களால் புலப்படுகின்றது. படுகை என்பது வெள்ளாற்றுக்கும் பெண்ணையாற்றுக்கும் இடைப்பட்ட இடமாகவிருக்கவேண்டும். பரங்கிப்பேட்டை யென்ற ஊராகவிருக்கலாமென்று தோற்றுகிறது. இதுவே பெரியதுறைமுகமாக விருந்திருக்கிறது. மாலங்கை என்பது பத்துப்பாட்டினுள் ஒன்றான சிறுபாணாற்றுப்படைக்குத் தலைவனான நல்லியக்கோடனும் அவனது மரபினரும் ஆண்டபகுதி. அது அருவாநாட்டில் ஒரு பகுதியாகும். அந்தப் பகுதியை மாவிலங்கை யென்றழைக்க அதன் கடற்றுறைப் பட்டினத்தையும் மாவிலங்கையென்று

புறநாட்டினர் கூறுவாராயினர். பெரிபுளுசில் இது சோபட்டினமென்று காணப்படுகிறது. பட்டினமென்ற பெயரோடு வழங்கியது. இதுபொழுது மரக்காணம் என்று வழங்குகிறது. பெண்ணையாறு கூடலூரில் கடலொடு கலக்கின்றது. மணற்பா என்பது மணரா என்ற ஆறு கடலொடு கலக்கும் இடத்திலிருக்கிறது. அதனையடுத்தே கோட்டிஸ் இருக்க வேண்டும்.

மைசோலியா வென்பது கிருஷ்ணு, கோதாவரியாறு கட்டுப்பட்ட இடம். மசூலிப்பட்டினம இந்த இரண்டு ஆற்றுக்கும் இடையிலிருக்கிறது கோண்ட கோஸிலா. வென்பது கோண்டபல்லி என்ற ஊர். கோட்டூரா என்பது கூடூர். அல்லோசினே என்பது கோரங்கியாக விருத்தல் கூடுமென்பர் மக்ரிண்டில். கிரிஸேக்குச் செல்லும் கப்பல் புறப்படுமிடம் காக்கிநாடாவாக இருத்தல்வேண்டும். அதுவே ஒரு வளைகுடாவுக்குள் கப்பல் தங்குவதற்குத் தகுதியாக விருக்கின்றது.

85. தமிழகத்தின் உள்நாட்டு ஊர்கள், நடுவிலுள்ள ஆறுகள்.

| | | |
|---|---|---|
| நருல்லா (Naroullai) | 117° 45′ | 15° 50′ |
| குபா (Kouba) | 117° | 15° |
| பாலூரா (Paloura) | 117° 51′ | 14° 40′ |

86. அழிமுகத்துக்கும் பரிஸாக்கும்

| | | |
|---|---|---|
| பஸகே (Pasage) | 124° 50′ | 19° 50′ |
| மஸ்தனூர் (Mastanour) | 121° 30′ | 18° 40′ |
| குறியலூர் (Kourellour) | 119° | 17° 30′ |
| புன்னத (Pounnata) | 121° 20′ | 17° 30, |
| ஆலவாய் (Aloe) | 120° 20′ | 17° |

| | | |
|---|---|---|
| கரூர், சேரபுத்திரரின் தலைநகர் | 119° | 16° 20′ |
| அரும்பூர் | 121° | 16° 20′ |
| பிடேரிஸ் (Bideris) | 119° | 15° 50′ |
| பாண்டிபோலிஸ் (Pantipolis) | 118° | 15° 20′ |
| அதரிமா (Adarima) | 119° 30′ | 15° 40′ |
| கரியூர் (Koreour) | 120° | 15° |

87. ஆய்நாட்டு ஊர்

| | | |
|---|---|---|
| மொருண்டா (Moronda) | 121° 20′ | 14° 20′ |

நருல்லா என்பது நறவு என்ற ஊர்; இப்பொழுது மங்களூர் என்று வழங்குகிறது. குபா என்பது கோவாவாக விருக்கலாமென்பது கொள்கை. ஆயினும் இது மங்களூருக்கு வெகுதொலைவிலுள்ள தென்பது கவனிக்கத் தகுந்தது. பாலூரா என்பது சௌகாட்டுக்கு அருகிலுள்ள பாலையூர் என்பர் கனகசபை.

பலகே என்பது கோவாவுக்குத் தென்கிழக்கிலுள்ள ஹல்வஸி என்ற ஊரென்பர். மஸ்தனார் இதுவென விளங்கவில்லை. குறியலூர் கொழுமூராக விருக்கலாமென்பர் சிவராஜ பிள்ளை. புன்னதா மீனக்கிலுக்கு அருகிலுள்ள பூஞ்சாற்று என்பர் கனகசபை. ஆலவாய் என்பது இன்றுமுள்ள கடற்றுறை. சேர நாட்டின் தலைநகரான கரூர் பெரியாற்றின் கரையிலுள்ள அழிந்துபோன ஊர். அரும்பூர் இன்ன ஊரென்று விளங்கவில்லை. பிடேரிஸ் என்பது பிதார என்ற ஊர். பாண்டிபோலிஸ் என்பது பாண்டியராமபுரமாக விருக்கலாம். அதரிமா என்பது அதரிமலை. கரியூர், மொருண்டா என்பவை விளங்காதன.

88. கரையார்நாட்டு உள்நாட்டு ஊர்கள்

| | | |
|---|---|---|
| மெண்டலா (Mendela) | 123° | 17° 40′ |

## 89. பாண்டிய நாட்டு ஊர்கள்

| | | |
|---|---|---|
| செல்லூர் (Selour) | 121° 45′ | 16° 30′ |
| திட்டோவா (Tittova) | 122° | 15° 20′ |
| மந்திட்டூர் (Mantittour) | 123° | 15° 10′ |
| கையனூர் | 124° 45′ | 18° 40′ |
| பெருங்கரை | 123° 20′ | 18° |
| கொருந்தியூர் (Korindiour) | 125° | 17° 40′ |
| தங்கலா (Tangala) | 123° 30′ | 16° 50′ |
| மதுரை-பாண்டிய இராஜதானி | 125° | 16° 20′ |
| அக்கூர் (Akour) | 124° 45′ | 15° 20′ |

## 90. வேட்டுவர் நாட்டு ஊர்

| | | |
|---|---|---|
| களிண்டாயியா (Kalindoia) | 127° 40′ | 17° 30′ |
| பாதா (Bata) | 126° 30′ | 17° |
| தலரா (Talara) | 128° | 16° 54′ |

கரையார் நாட்டு ஊர்களில் செல்லூர் என்பது அகம் 90-ல் கண்ட சேயலூராக வேண்டும். மற்றய மூன்றும் குறிப்பிட முடியவில்லை. கையனூர் தேர்வண்கோமானாது நகரான தேனூர் ஆகவேண்டும். இது மதுரை ஜில்லா திரிச்சுழி தாலுக்காவிலிருக்கிறது. பெருங்கரை மதுரைக்குக் கிழக்கு 40 கட்டை தொலைவில் வைகைக் கரையிலிருக்கிறது. கோருந்தியூர் கொழுந்தியூர் ஆகவேண்டும். தங்கலா சாத்தூர் தாலுகாவிலுள்ள திருத்தங்கலென்பர் கனகசபைப் பிள்ளை. மற்றவை விளங்கவில்லை.

## 91. சோழ நாட்டு ஊர்கள்

| | | |
|---|---|---|
| காவியூர் | 129° | 17° 20′ |
| தென்னகரா (Tennagara) | 132° | 17° |
| எக்கூர் (Eeikour) | 129° | 16° 40′ |

| | | |
|---|---|---|
| உறத்தூரா (Orthoura) சோழர் தலைநகர் | 130° | 16° 2 |
| பேரே (Bere) | 130° 20′ | 16° 1 |
| அபூர் (Abour) | 129° | 16° |
| கர்மரா (Karmara) | 130° 20′ | 15° 40 |
| மாகூர் (Magour) | 130° | 15° 15 |
| கருவாகே (Kerauge) | 133° | 16° 15′ |
| புரூரியன் | 132° | 15° |
| காரிகை (Karige) | 132° 40′ | 5° |
| புலியூர் (Poleour) | 131° 40′ | 5° |
| பிகண்டகா | 131° 30′ | 14° 4′ |
| இயத்தூர் (Iatour) | 132° 30′ | 14° |
| ஸ்கோபலூரு (Skopoloura) | 134° 15′ | 14° 35′ |
| இகர்த்தா (Ikarta) | 133° 30′ | 13° 40′ |
| மாலங்கை - பஸர்நாகர் தலைநகர் கண்டிபட்டணம் | 133° 30′ | 12° 30. |

சோழ நாட்டில் காவியூர், கள்ளியூர், கிளியூர் என்ற பேருடைய ஊர்கள் பல இருக்கின்றன. தென்னகரம் என்பது தஞ்சையாக விருக்கலாமோ என்பது யோசிக்கத் தக்கது. எக்கூர் என்பது இதுவெனக் கூறுவதற்கில்லை. சீகாழிக் கருகில் எருக்கூர் என்று ஒரு ஊருண்டு. உறத்தூர் சோழரது தலை நகரான உறையூர் ஆகும். பேரே என்பது பேரளமாகுமாயின் நன்னிலம் தாலூக்காவிலிருக்கிறது. அபூர் ஆலூர் ஆக வேண்டும். திருவாரூருக்குக் கிழக்கிலுள்ளது. கர்மரா கமலையென்ற திருவாரூராக விருக்கலாமென்பது கனகசபைப் பிள்ளை யபிப்பிராயம். மாகூர் நாகூராக விருப்பின் நாகபட்டினத்திற்கு வடக்கில் வெட்டாற்றின் கரையிலுள்ளது. கருவாகை யென்பது விளங்கவில்லை. கருவாழகரையாயின் மாயூரம் தாலூக்காவில் இந்தப் பேருடைய ஊர் ஒன்றுளது.

சூரியன் என்ற சொல்லுக்கு மலைக்கோட்டை யென்று பாருள். இது மாவிலங்கையான கிடங்கிலுக்கு அருகாமை லுள்ள செஞ்சிக் கோட்டையாகும். கரிகை யென்பது தாண்டை மண்டலத்திலுள்ள இருபத்துநான்கு கோட் ங்களுள் ஒன்றான கடிகை. புலியூர் புலியூர்க்கோட்டத்தின் தலைநகர். சென்னையைச் சார்ந்த கோடம்பாக்கத்தை யடுத் துள்ளது. பிகண்டகா என்பது பல்குன்றமாக வேண்டும்' இயத்தூர் ஈத்தாராக வேண்டும். இகர்த்தா என்பது குன்ற பத்திரம். பஸர்நாகரது தலைநகரான மாலங்கை திண்டிவனம் ரயிலடியிருப்பதான கிடங்கில் என்ற ஊர். கிடங்கிற் கோ மான் நல்லியக்கோடன் நாகர் வமிசத்தினனென்பது நூல்க ளால் அறியுஞ்செய்தி. மாவிலங்கையைக் காஞ்சீபுர மென்பர் சிலர். தாலமி காஞ்சிபுரத்தைக் கூறினராயின் அப்படியே கூறியிருத்தல் கூடும். ஆகவே அது காஞ்சி யன்று.

இவ்வளவே தமிழ்நாட்டைக் குறித்து தாலமி கூறும் விவரமாகும்.